# கனடா இந்து



## 2000ல் பிரளயம்?

## Hindu Forum

# Canada HINDU

B4 081

Published by Toronto Sri Durka Hindu Temple

# பேன்சி பூக்கடை

# Fancy Florist

**Party Supplies & Gifts**

## பூ வட்ட மணவறை

(416) 288-1419



தமிழ் கிறிஸ்தவ அன்பர்களின் திருமணத்திற்குத் தேவையான மலர் அலங்காரம், கோவில் அலங்காரம், Boutonnieres, Bridal Bouquets, Flower Baskets, Floral Arches முதலியனவும் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

குத்து விளக்கு பெரிய Vase, கதிரை - மேசைகள் வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

- வட்ட மணவறை
- பூ மாலை
- Baloons
- Party Supplies
- Gifts

**1668 Victoria Park Ave.**
( 2 Blocks North Of Eglinton )
**Princess Plaza**

**3059,Sheridan Dr.**
**Amherst, N.Y. 14226, U.S.A.**
**(716) 838-0844**

# இதழுக்கு உள்ளே ......




10ம் பக்கம்

## பிரச்சனை முடிந்தபாடில்லை ... என்ன நடக்கும்?

# 2000ல் பிரளயம்?

இன்னும் ஒரு வருடத்தில் உலகம் அழியுமா? சிலர் அச்சப்படுகிறார்கள். சிலர் எல்லாமே சுத்தப் புரட்டு என்கிறார்கள். பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பாரும் உண்டு. அலட்சியப்படுத்துதல் அறியாமை என்கின்றனர் வேறு சிலர். இலங்கையுடன் சேர்த்து இன்னும் பல நாடுகள் தண்ணீருக்களுள் மூழ்கிவிடும் என்று சிலரின் அபிப்பிராயம். "சிங்களநாட்டுப் பகுதி அழிய வடபகுதி தென்னிந்தியாவுடன் இணைந்துவிடும்" என்ற கருத்தில் காண்டங்கள் இருப்பதாக அந்தத்துறையில் நிபுணத்துவம் உள்ளவர்கள் கருதுகிறார்கள். கனடாவுக்கு எதுவும் நடக்காது என்றுகூட பலர் சமாதானம் செய்து கொள்ளுகின்றனர். "இருந்து பாருங்கள் ... எல்லமே ஒரு பூஸ்வாணம்" என்று கூறிய சிலருக்கும் தற்போது யோசனை மாறுகிறது.

உள்ளே 3ம் பக்கத்தில்.......

## நாஸ்தீகத்துடன் சமர்

பக்கம் 5ல்

ஆஸ்தீகர்கள் தம் சுயநலத்துக்காக கடவுள் நம்பிக்கையைப் பயன்படுத்துகிறார்களாம்! இப்படிக் கூறும் நாஸ்தீகர்களின் வாழ்க்கையை நுணுக்கமாக உற்றுப்பார்த்தால் அங்கு அநேகர் முழுச் சுயநலவாதிகளாகவும் சமூக அக்கறை அற்றவர்களாகவுமே இருக்கிறார்கள். கொள்கை வலு அற்ற நாஸ்தீகர்களே அதிகம்.

தம்மை மக்கள் முன்னிலையில் வெளிச்சமிட நாஸ்தீகத்தைப் பயன்படுத்துதலும் இப்போது நடைமுறையில் உள்ளது.

யாராவது நாஸ்தீகர்களுடன் அவர்களின் கருத்துப் பற்றி வாதாடிப்பாருங்கள். ........ உங்கள் கருத்துக்களுக்குப் பதில் அளிக்காது உங்கள் சொந்த வாழ்க்கையில் ஏதாவது பிழை சொல்லி தம்மைச் சுதாகரித்துக் கொள்வர் ......................

## இந்து சோதிடத்தின் பார்வையில் உலக கணனி மெதுகலத் தொழில் நுட்பத்தை உலுக்கும்

# பில் கேட் .....

பக்கம் 13ல்

கல்வியும் அல்ல ... முயற்சியும் அல்ல .. அதற்கும் மேலே ஏதோ ... அது!



Bill Gates

## Hindu Forum

எளிமையான வாழ்வும் இதய சுத்தியும் மகான்களில் வாழ்க்கையின் இரகசியம். நாகரீக வாழ்க்கையில் படாடோபமும் பகல்வேசமும் முதலிடம் பெறுகின்றன. இந்த எதிர்மறை இந்து சமயத்தில் என்ன விளைவை உருவாக்கும்?





உள்ளே ....

சந்தேக நிவர்த்தி

அக்கினிப் பிரவேசம்

பதஞ்சலி பதில்

திருமணச்சடங்கு

சமய விருந்து

சம்பவங்களின் அர்த்தம்

சோகம் – சோதிடம் – சுகம்

இன்னும் ...

## கனேடிய தமிழ் ஒலிபரப்பு

## Why Vegetarionism?

"The speech of learned ones is banned. It wishes to express itself but it has been stifled. Such a suppressed voice becomes more dangerous and militant"

-Atharva Veda

அறிவுள்ளவனின் வார்த்தை அடக்கப்பட, அது தன்னையும் மீறி வெளிப்பட முயற்சிக்க, அந்த அடக்கப்பட்ட குரல் அபாயகரமானது மட்டும் அல்ல..... ஆவேசத்தின் விளைவை உருவாக்கும்.

- வேதம் கூறியதின் காலபேதம்


கனடா இந்து

Spring 1999 | Hindu Cultural Magazine published in Canada

கலியுகம் 5101 - வள்ளுவம் 2030
உத்தராயணம் - இலையுதிர் காலம்


## அன்பின் வாசகர்களுக்கு,

தமிழ் இந்துப் புத்தாண்டு வாழ்த்துக்கள் !!!

புத்தாண்டு பிறக்கிறது. அத்தோடு கனடா இந்து என்னும் இச் சஞ்சிகையும் உதயமாகிறது. ஒரு புதிய சஞ்சிகை.

ஆன்மீகத்தினை மக்களோடு நின்று பகிர்ந்து கொள்ளும் முயற்சி. தனி ஆன்மீகத்துடன் நின்றுவிடாது, கனடா வாழ் இந்துக்களின் அன்றாட வாழ்வுடன் இணைந்த ஒரு நட்பு.

மக்கள் ஆன்மீகத்தில் இருந்து வெகுதூரம் விலகிப் போனபோது, அவர்களுடனே சென்று அவர்களை மீள அழைத்து வரும் ஆசை.

தத்துவங்களும் கருத்துக்களும் மக்களுக்கு சலிப்பையோ பயத்தையோ உண்டாக்கும் இந்தக் காலத்தில், எளிமையாக..... சற்றுத் துணிவாகவும்தான் ... இந்து மதத்தின் இனிமைகளைக் கொடுத்தால் என்ன ....

கொடுத்துத்தான் பார்ப்போமே ....

நீங்களும் சுவைத்து .... அதையும் கடந்து உங்கள் சிந்தனையைத் தொட்டுப் பாருங்களேன்...

இந்து சமயம் கூறும் நல்ல நெறிகளை அறியாமல் நாம் எத்தனையோ தவறுகளைச் செய்கிறோம். சில வேளைகளில் நாம் செய்தது தவறு என்றுகூட அறியாமலே போகிறோம்.

"தம்பி, தங்கைச்சி... நீங்க இப்படிச் செய்யாமல் ... இப்படிச் செய்திருந்தால் நல்லதல்லவா"

என்று யாரேனும் சொன்னால் "அட தப்புப் பண்ணிட்டமே" என்று மனத்துக்குள்ளாவது நாம் அழுது கொள்கிறோம். அதுதான் நம் எல்லோரிடமும் உள்ள நல்ல மனசு. உலகத்தில் எல்லோருமே நல்லவர்கள். அந்த மனங்கள் தம்மை உணராமையினால் போட்டி, பொறாமை, காம, குரோதம் என்று மாசுபடுத்தப்படுகின்றன.

அந்த மனங்கள் தம்மைத் தாமே அறிந்து கொள்ள இந்துசமயக் கருத்துக்களை எடுத்து வருகிறோம்.

இங்கு இலக்கியமும் இருக்கும் : விஞ்ஞானமும் இருக்கும் : சினிமாவும் இருக்கும் : அரசியலும் இருக்கும் : அலசலும் அதில் இருக்கும் :

......... அவை இந்துக்களின் தூயமனத்தில் நல்ல எண்ணங்களை விதைக்குமானால். மதம் என்பதை மக்களிலிருந்து பிரித்துப் பார்த்தால் அங்கு அர்த்தம் இல்லை. மக்களுக்காகவே மதம்.

சுமைகளின் மத்தியில் மன அமைதி பெற இந்தச் சஞ்சிகை தன்னால் இயன்ற பணியைச் செய்யும். மனம் அமைதி பெறுமானால் அங்கே ஆன்மா லயப்படும்.

ஆன்மாவின் லயம் அதுதான் ஆலயம். புறத்தளவில் ஆலயங்கள் செய்யும் பணியை அகத்தளவில் கனடா இந்து என்னும் இச்சஞ்சிகை செய்யுமாயின் எம் எண்ணம் ஈடேறும்.

நமசிவாய

Canada HINDU

# May 4, 2000
## கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சூரி சந் புத வியா சுக் சனி | செவ் | |
| | **வாக்கியம்** | | ராகு |
| கேது | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | சூரி சந் புத வியா சுக் சனி | செவ் | |
| | **திருக்கணிதம்** | | ராகு |
| கேது யூரே நெப் | | | |
| | புளு | | |

# 2000 பிரளயம்

ஏதோ நடக்கும் என்று ஒரு எதிர்பார்ப்பு. என்ன நடக்கும்? எப்போ நடக்கும்? இந்தக் கேள்விகள் பலரைப் போட்டுத் துளைத்துக் கொண்டிருக்கும். நடக்குமோ, நடக்கவில்லையோ ... ஒன்று மட்டும் நிஜம். அடுத்த வருட முடிவில் நடந்து முடிந்த ஏதோ ஒரு நிகழ்ச்சியைச் சொல்லி, “இதைத்தான் எதிர்பார்த்தோம்” என்று நியாயப்படுத்தல் நடக்கும் என்பது நிச்சயம்.

1999ம் ஆண்டு யூன் மாதம் முதல் 2000ம் ஆண்டு யூன் மாத இடைவெளிக்குள் ஏதோ நடக்கும் என்பதே பலருடைய கருத்தின் சாராம்சம்.

---

1999ம் ஆண்டு கோடை காலப்பகுதியில் உலகத்தில் பேரழிவு ஏற்படும் என்பது நொஸ்ரடாமஸ் என்பவரின் தீர்க்க தரிசனம். அதாவது இன்னும் ஒருசில மாதத்தில். அண்மையில் ஐரோப்பிய நாடுகளினதும் நேட்டோ நாடுகளினதும் போக்கு இவ்வாறான அழிவு ஏற்படக் கூடிய சாத்தியங்களைத் தெரிவிப்பினும், கீழைத் தேச மேலைத்தேச சோதிடங்கள் பெரும் அழிவை ஊர்ஜிதம் செய்ய வில்லை. வியாழனின் சாரத்தினை வைத்து சில கீழைத்தேச சோதிடர்கள் நாடுகளுக்கிடையில் ஏற்படும் குமுறுதல்களையும் விரிசல்களையும் முன்கூட்டித் தெரிவித்துள்ளனர். நொஸ்ரடாமஸ் சொன்ன அனைத்தும் நிகழ்ந்திருக்கிறது என்று பல ஆய்வாளர்கள் கோரியுள்ளனர். அவ்வாறானால் இது....?

---

2000 ஜனவரி மாதம்
கம்பியூட்டர்களில் 2000ம் ஆண்டுக்கான திருத்தம் சரியான முறையில் பூர்த்தியாகாத வகையில் சில இயந்திரங்கள், சாதனங்கள், ஆயுதக் கருவிகள் தப்பான முறையில் இயங்குவதால் பேரழிவு ஏற்படலாம் என்பது பலரின் கருத்தாக உள்ளது. மேலைத்தேசத் தீர்க்கதரிசிகள் கூறியிருப்பதையும், கிறிஸ்தவர்களின் சமயத்தின்படி 2000 ஆண்டளவில் ஏதாவது அனர்த்தம் ஏற்படவேண்டி இருப்பதாலும், "வேண்டும்" என்றே போரினை ஏற்படுத்தியோ, அழிவுக்கான காரணத்தை ஏற்படுத்தியோ தங்கள் நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்ய சில மேலைத்தேச நாடுகள் முயற்சி செய்யலாம் என்ற கருத்தும் உண்டு. ஓய்2கே பிரச்சனை சரியான முறையில் திருத்தப்படாமல் இருக்க, இதன் விளைவில் இராணுவ சாதனங்களை தப்பான முறையில் இயங்க வைக்க உளவு ஸ்தாபனங்கள் முயற்சி செய்வதற்குச் சாத்தியக்கூறு உண்டு என்ற கருத்தும் உள்ளது.

---

2000 மே மாதம் 4ம் திகதி எல்லாக் கிரகங்களும் கிட்டத்தட்ட ஒரே நேராக வருகின்றன. யூரோனஸ், நெப்டியூன், புளூட்டொ கிரகங்கள் 90 பாகையில் வருகின்றன. இந்த நிலையில் கிரகங்களின் கவர்ச்சியோ அல்லது பூமியின் சுழல்கையோ குழம்பலாம் என்ற அச்சம் விஞ்ஞான மட்டத்திலும் இருக்கிறது. இந்தக் குழம்பல் எதை விளைவிக்கும் என்பது எவருக்கும் தெரியாது. ஒவ்வொருவரும் இதற்குப் பலவிதமான வியாக்கியானம் கூறுகின்றனர்.

---

மேடராசியில் கிரகங்கள் யாவும் இணைந்த போது கலியுகம் ஆரம்பமானது. எனவே மே மாதம் 4ம் திகதி கலியுகம் முற்றுப் பெறுகிறது எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால் மே மாதம் 4ம் திகதி, செவ்வாய் கிரகம் மேடராசியில் இணையவில்லை. எனவே யுகம் முடிவு என்ற பேச்சுக்கு இடமில்லை. காலக்கணக்கின் படி கலியுகம் முடிய இன்னும் பல லட்சம் ஆண்டுகள் இருக்கின்றன. வேறு சிலர் கலியுகம் இப்போதுதான் ஆரம்பிக்கப் போகிறது என்கிறார்கள்.

---

ஹென்றி எப்பிஸ்ரில் என்பவரின் கருத்து ... 2000ம் ஆண்டு இலைதளிர் காலத்துக்கும் இலையுதிர் காலத்துக்கும் இடையில் பூமியின் அச்சு சடுதியாக விலகும். இந்த விலகல் இரண்டு திடுதிடுப்பான விலகலாகவோ அல்லது ஒரேதான விலகலாகவோ இருக்கும். காலநிலைகள் மாறும். பூமி அதிர்வு, பூகம்பம் ஏற்படும். பூமியின் கவர்ச்சி விசையும் குறைந்தது போன்ற உணர்வு ஏற்படும்...... என்கிறார்.

---

இந்தியாவில் உள்ள ஒரு ஆய்வாளரின் கருத்துப்படி, இந்த பூமியின் அச்சுமாற்றத்தால் சில நாடுகள் கடலுக்குள் சென்றுவிடும் என்றும், கடலுக்கு உள்ளே புதிய நாடுகள் தோன்றும் எனக் கூறப்பெற்றுள்ளது. கடலுக்குள் போகும் நாடுகளில் ஒன்றாக ஸ்ரீலங்காவும் கூறப்படுகிறது. இதற்கு மாற்றுக் கருத்தாக, காண்டங்கள் சிலவற்றில் தமிழ்நாடும் வட இலங்கையும் இணைவது பற்றி உண்டென்றும், பாக்கு நீரிணை அற்றுப்போய் நிலப்பரப்பு இணைந்துவிடும் என்ற கருத்தும் உண்டு.

---

இதை ஒரு இடையுக இறுதி என்றும், இந்த யுகத்தின் நாயகனாகிய சத்தியசாயிபாவின் சிறப்பும் அற்புதங்களும் வெளிப்படும் என்றும் வேறுசில கருத்துக்கள் கூறுகின்றன. உலகெங்கும் சத்தியசாயிபாவின் அருள்பரவும் என்றும் அவரின அவதார மகிமை வெளிப்படுத்தப்படும் என்றுகூட சிலர் நம்புகின்றனர். இதற்கு பின்னணியாக, குதிரையின் மீது சத்தியசாயிபாவா வருவது போன்ற சொப்பனங்களைப் பல பக்தர்கள் கண்டதாகவும் கூறியுள்ளனர்.

நொஸ்ரடாமஸ் என்பவரின் தீர்க்கதரிசனத்தின்படியும் கீழைத்தேசத்தில் உள்ள ஆச்சிரமம் ஒன்றில் இருந்துதான் உலகத்தையே மாற்றும் ஒரு சக்தி தோன்றும் என 500 வருடங்களின் முன்னர் கூறப்பட்டதையும் ஆதாரமாகச் சிலர் கூறுகின்றனர்.

# கனடா இந்துசமய தமிழ் ஸ்தாபனங்களிடம்
# ஒரு வேண்டுகோள்

இந்து சமயம், இந்துக் கலாச்சாரம் ...

இவை என்றும் அழியாது எம்முடைய அடுத்த தலைமுறைக்குச் செல்ல வேண்டும் என்பது எல்லோருக்கும் உடன்பாடான கருத்து. அதை நிலைநாட்டுவது பொது நோக்கம். ஆனால் அந்த நோக்கம் நிறைவேற சரியான பாதையைக் கண்டிருக்கிறோமா?

"ஆம்" என்று சிலவேளை நினைத்திருப்போம். ஆனால், positive ஆக நினைப்பது negative ஆக அமைந்து விட்டது நம் கருத்துக்கு எட்டாமலும் போயிருக்கலாம். எது எப்படி இருப்பினும், ஒரு முறை நின்று நிதானிப்பதால் எதுவும் கெட்டுவிடாது.

இங்குள்ள ஆலயங்கள் (சில?) வியாபாரம் செய்கின்றன என்ற கருத்தை பல சமயஸ்தாபனப் பிரமுகர்கள் மேடையிலும், வானொலியிலும், பத்திரிகையிலும் முன் வைத்திருக்கின்றனர்.

இந்தக் கருத்தில் உண்மையிருக்கலாம். ஆனால் இந்தக் கருத்தை அடிக்கடி கூறும்போது அதன் விளைவு என்னவென்று சிந்திப்போமா?

இதோ, இந்த இளைஞனிடம் பேசிப் பார்ப்போம்.

"இப்படிச் சமய நம்பிக்கை இல்லாமல் இருக்கிறீர்களே.. ஏன் இந்த நம்பிக்கையீனம்?"

"கோவிலுக்கு ஏன் போவதில்லை என்று கேட்கிறீர்களோ. இவர்கள் எல்லாம் வியாபாரம் என்று நீங்களே கூறுகிறீர்கள். பிறகு ஏன் கோவிலுக்குப் போக வேண்டும். இதை நம்புவதால் என்ன பிரயோசனம்?"

இந்த இளைஞனின் பெற்றோர்களை அணுகினோம்.

"பிள்ளைகளை சமயநம்பிக்கையுடன் வளர்க்க ஏன் மறந்தீர்கள்"

"சமயம் என்றால் கடவுளிடம் நம்பிக்கை எற்படவேண்டும். கடவுளிடம் நம்பிக்கை வளர்வதென்றால் ஆலய வழிபாடு தேவை. ஆலயம் இல்லாமல் நம்பிக்கை பெற நாம் ஞானிகள் அல்ல. ஆலயங்கள் வியாபாரமாகி விட்டதென்று சொல்கிறார்கள். அவ்வாறான ஏமாற்றுக்களை நாம் விரும்பவில்லை. அதனால் நாங்கள் கோவிலுக்குப் போவதைக் குறைத்துவிட்டோம். இதனால் பிள்ளைகளிடம் சமய எண்ணம் இல்லாமல் போய்விட்டது."

ஆகவே, கோவில் என்பது வியாபாரம் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் ஆழமாகப் பதியும் வண்ணம் செய்வதில் சில ஸ்தாபனப் பிரமுகர்கள் செய்துவிட்டதன் விளைவு?

இங்கே கோவில் நடத்தும் எட்டுப் பேரைத் திருத்த நினைத்து... அந்த எட்டுப் பேரும் திருந்தினார்களோ என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்! மாறாக, எண்ணாயிரம் பேர் கோவிலில் - கடவுளில் நம்பிக்கையற்றுப் போக, எண்பதினாயிரம் பேரின் நம்பிக்கையில் தளர்வேற்பட காரணமாகியும் விட்டது. இது மிகைப்படுத்தல் இல்லை.

சாதாரண மக்களின் சமய நம்பிக்கையை சமய வகுப்புக்களால் மட்டும் வளர்த்துவிட முடியாது. சரியை, கிரியை என்ற மார்க்கமே பொருந்தியதாக உள்ளவர்களுக்கு கோவில்தான் சமய நம்பிக்கையின் அடித்தளம். யோகம், ஞானம் என்ற நிலையில் உள்ளவர்கள்தான் போதனையில் நம்பிக்கை உயர்த்தப் பெறுவர். ஆலயத்தில் நம்பிக்கையற்றுப் போகச் செய்துவிட்டு, ஆலயவழிபாட்டின் மகத்துவம் பற்றிக் கற்றுக் கொடுப்பது பிரயோசனம் தருமா?

ஒரு கேள்வி எழுகிறது.. அவ்வாறானால்

"கோவிலை வைத்துப் பணம் சம்பாதிப்பதை அனுமதிக்கலாமா?" இது நல்லதொரு மனக்குமைவு.

இங்கு ஒருவருமே இலவசமாக, தமது பணத்தில் கோவில் வைக்கப்போவதில்லை. (அப்படி எதிர்பார்ப்பது அறிவீனம்) ஆலய உரிமையாளர்கள் மேலதிகமாக, கோவில் மூலம் சம்பாதித்தால் அதை இந்துக்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தவேண்டும் என்பதே நியாயமான கருத்து. அதை இந்துசமய வளர்ச்சிக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதைத் தீர்மானிப்பது நாம் அல்ல... ஆலயங்கள். சில ஆலயங்கள், கோவிலை "முழுமையான கோவில்" ஆக அமைத்து மக்களில் பக்தியை வளர்க்க விரும்பலாம். சில ஆலயங்கள் "கல்விக்கூடங்கள், சமய வகுப்புக்கள்" நடத்தி சமயத்தை வளர்க்கலாம். சில கோவில்கள் "பஜனைகள், இந்துசமயப் பிரசங்கங்கள்" மூலம் சமயத்தை வளர்க்கலாம். சில ஆலயங்கள் புத்தகங்களை வெளியிட்டு சமயம் வளர்க்கலாம். சில ஆலயங்கள் இவை அனைத்தையுமே செய்யலாம்.

.... இதில் எந்த வழியைப் பின்பற்றுவது என்பது ஆலயங்களின் முடிவு. ஆனால் ஏதோ ஒரு வகையில் சமயத்தில் கரிசனை உள்ளனவாக ஆலயங்கள் இருக்க வேண்டும்.

"ஆலயங்கள் வியாபாரம் செய்கின்றன" என்று திட்டிக் கொண்டிருப்பதால் மட்டும் இந்தக் கரிசனையை வளர்க்க முடியாது. சுத்தம் செய்யப்போய்... சேற்றினை சூழவர உள்ள எல்லோரிலும் எத்தி .... சமயநம்பிக்கை குறைய வழிவகை செய்வது விவேகமானது அல்ல.

முடியும்... எல்லா ஆலயங்களும் சமயக் கரிசனையுடன் இருக்க முடியும்...

முடியும் ... அன்பால்.. அறிவூட்டுகையால்... நட்பு உணர்வால் ... நல்லதை நல்லபடி எடுத்துக் கூறுவதால் ... முடியும் ... இன்னும்,

"முடியும்" என்ற இந்த நம்பிக்கையை சமய ஸ்தாபனங்கள் தம்மில் வளர்க்கவும் முடியும்.

கோவில் அவதூறு என்பது சமயநம்பிக்கையுடன் பின்னிப் பிணைந்திருப்பதால், அது எந்தக் கோவிலாக இருப்பினும், சற்று அவதானமாக வார்த்தைகளைப் பிரயோகியுங்கள். இப்படிக் கேட்டுக்கொண்டால்கூட "கோவில் வியாபாரத்துக்கு இவன் வக்காலத்து வாங்குகிறான்" என்று என்னையும் திட்டலாம். விரும்பிய அளவு திட்டுங்கள்.

தமிழர்கள் - இந்துக்களின் உயர்ச்சியில் ஒரு தமிழ் இந்துவின் கடமைச் செய்வதில் ஏன் பின்நிற்க வேண்டும். எம் இந்து சமயத்தினை களங்கம் செய்யாதீர்கள். தூரநோக்கற்ற சிந்தனைகளில் இந்து சமய நம்பிக்கையை தூர்ந்துவிடாமல் பாதுகாப்போம்!!!

(இதே நேரம் சில வழிபாட்டு இட உரிமையாளர்களின் விளம்பரம் மிகுந்த வேதனை அளிப்பதாகவும் இருக்கிறது. தொடர்ச்சியான நிலைப்பை நோக்கமாகக் கொள்ளாது "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும்" மனப்பான்மை அப்பட்டமாக வெளிப்படும் போது எந்த இந்துவின் மனம்தான் வேதனைப்படாது! இது முள்ளில் விழுந்த சேலை. அதை முழுமையாக எடுக்கும் பக்குவத்தை சமய ஸ்தாபனங்கள் பெறவேண்டும். சுருங்கச் சொன்னால் ...... இந்துக்களின் விழிப்புணர்வே இதற்குத் தீர்வு )

# நாஸ்தீகத்துடன் சமர்

## ஒரு விவாதச் சித்தரிப்பு

கிருஸ்ணா சிவப்பிரகாசம்

"நாஸ்தீகன் என்றால் யார்?"

இப்படி ஒரு கேள்வியை என்னிடம் கேட்டால் எனது பதில் சற்று வித்தியாசமாக இருக்கும். சிலவேளை அந்தக் கருத்துடன் நீங்கள் உடன்படாதவர்களாகவே இருக்கக் கூடும்

.... விளங்காமல் கடவுள் இல்லை என்று கூறுபவனும் நாஸ்தீகன். விளங்காமல் கடவுள் உண்டு என்று கூறுபவனும் நாஸ்தீகன்.......

"நாஸ்தி.." என்றாலே இல்லை என வருகிறதே... விளங்கினால் என்ன விளங்காவிட்டால் என்ன.. கடவுள் உண்டு என்று கூறுபவனை எப்படி நாஸ்தீகன் என்று கூறலாம்...

ஒன்று இருக்கிறது என்பதை உணராமல் அறியாமல் ... யாரோ சொல்கிறார்களே என்பதற்காக தலையாட்டிக் கொள்வது மெஞ்ஞான யுகத்திலேனும் சரி... விஞ்ஞான யுகத்திலேனும் சரி "சூனியம்" தான். ஆகவே அவர்களும் நாஸ்தீகத்துக்குள் அடங்கும். ஒன்று உண்டென்பதை ஏற்றுக் கொள்வதானால் அது ஏன் உண்டு என்பதை அறிய அவன் முயற்சிக்க வேண்டும். ஒன்று இல்லை என்று சொல்லும் போது, அப்படிச் சொல்பவன் "இருக்கிறது" எனச் சொல்கிறவன் வைத்திருக்கும் ஆதாரத்தை விளங்கிக் கொள்ளும் அல்லது விவாதிக்கும் முறைகளை அறிந்தவனாக இருக்க வேண்டும்.

"இத்தனை மகான்களும் இத்தனை காலமாகச் சொல்கிறார்களே"

ஆனபடியால் உண்மை என்று கூறுவது விசுவாசம். ஆனால் அதுவே ஒரு வாதமாக ஏற்றுக் கொள்ள முடியுமா? அந்த மகான்கள் ஏன் அப்படிக் கூறினார்கள் என்று உணர்ந்தபின் பின்பற்றுவது பக்குவம்.

அதே போல, "நம்ம தலைவரு சொல்லுறாரு. ஆனபடியா, ... இல்லை..." என்னு சொல்லுறதும் தப்புங்க.

இன்னொரு மதத்திலே பூமி தட்டையானது என்ற கருத்துப்பட உள்ளது. அதை அன்று எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். கலிலியோ பூமி தட்டையானது என்பது தவறு என்று கூறிய போது,

"அது எப்படி முடியும்... இத்தனை காலமாக நம்பி வருகிறோமே.. அது தவறாக முடியாதே ..."

என்று, அன்று நினைத்திருந்த காலம். இன்று உண்மை புரிந்த காலம்.

கடவுள் இருக்கிறார் என்றால் அதற்கு தர்க்கரீதியில் விளக்கம் வேண்டும். அவ்வாறு விளக்க முயற்சிக்க, அல்லது விளக்க அல்லது விளங்கத் தெரியாவிடில் அவர்களுக்கும் கடவுள் இல்லை என்று கூறுபவனுக்கும் ஏது வித்தியாசம்!

அது கதையின் ஒரு பக்கம் .... இருக்கட்டும்!

இனிக் கதையின் அடுத்த பக்கத்துக்கு வருவோம்..

"கடவுள் இல்லை ... இல்லவே இல்லை"

"ஏனுங்க?"

இப்படித்தான் கேட்டேன். பார்ப்பனர்களின் அட்டகாசம் உங்களுக்குத் தெரியுமா, எவ்வளவு தூரம் மற்றவர்களைத் தாழ்த்திக் கொடுமைப்படுத்தி இருக்கின்றனர் என்று தெரியுமா?"

"சரி, பார்ப்பனர்கள் ஏதாவது செய்தால் கடவுள் இல்லை என்பதற்கும் அதுக்கும் என்னங்க சம்பந்தம்?"

"ஆரியர்களை ஆதரிப்பது திராவிடத்துக்கு செய்யும் துரோகம்"

என்னங்க இது கட்சியா நடத்துறம்... ஆரியர்களின் மொழியில் இந்துசமயச் சமாச்சாரங்கள் இருந்தால், அதுக்கும் கடவுள் இல்லை என்று சொல்வதற்கும் என்னங்க சம்பந்தம் ? விஞ்ஞானக் கண்டுபிடிப்பு எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கிறது என்பதற்காக விஞ்ஞானமே பொய் என்று தமிழன் சொல்வதா?

"மக்களைச் சமனாக நடத்த முடியாத சமயம் எதற்கு?"

அமரிக்காவில் பிட்ஸ்பேர்க் என்னும் இடத்தில் அமைந்துள்ள வெங்கடேஸ்வரர் ஆலயம் உயரமாகத் திடலில் இருப்பது ஸ்தலத்துக்கு சிறப்பளிக்கிறது.



சரி, சமயம் மக்களைச் சமனாக நடத்தவில்லை என கருதுவது இருக்கட்டும். அப்டீன்னா கடவுள் இல்லையா?"

"கோவிலைக் கட்டிக் கடவுளின் பெயரைச் சொல்லி வியாபாரம் நடத்துகிறார்கள்"

"அப்படி வியாபாரம் நடத்தச் சொல்லிக் கடவுள் வந்து சொன்னாரா. .. ? எங்கேயோ ஒரிரு இடத்தில் அப்படி நடக் கலாம்... என்னங்க இது .... மாடு வேலி புகுந்து பயிரை மேஞ்சிட்டுது என்பதற்காக மாடு வைத்திருப்பவர் எல்லோரினதும் வீட் டைக் கொளுத்துவம் எண்டால் ... ரொப்ப அறிவு கம்மியா இருக்குதுங்க...

ஆகவே, மகா ஜனங்களே எல் லோருக்கும் இத்தால் தெரிவிப்பது என் னவென்றால் ...

(எங்கோ தண் டோரா போடுவது கேட் கிறது)

கடவுள் இ ல் லை என் று கூறியவர் இதுவரை சொன்ன விடயங்கள் எதுவும் தொடர்பற்றவை. ஆனால் இப்படியான சிந் தனை உள்ளவர்கள் பலரும் உண்டு.

"நம்ம கழகக்காரரு சொல்லுறாரே" என்பதற்காக கடவுள் இல்லை என்று கண்ணை மூ டிக்கொண்டு சொல்பவர்களும் ஏராளம் உண்டு. (கழகக்காரரு சாமியார்களை நம் பியதும் முகாம்பிகை கோவிலுக்குப் போனதும் யாருக்காவது தெரிந்தால் அதை மறந்துவிடுங்கள்)

பார்ப்பனர்கள்தான் சமயம் அல்ல.

சமயம்தான் கடவுளும் அல்ல. ஆரியர் மட்டும்தான் இந்துக்களும் அல்ல.

இந்துக்கள் மட்டும்தான் கடவுளை நம்புகிறவர்கள் என்றும் அல்ல

... அப்படியிருக்க கடவுள் இல்லை என்று ஏன் சொல்லுறீங்க?"

"சரி, கடவுள் இருந்தால் காட்டுங் கள் பார்க்கலாம்..."

சபாஷ்... இப்போதுதான் உண் மையான சிந்தனை வெளிப்படுகிறது. விளக் கமான கருத்துக்கு விசாலமான களம் அமைக்கப்படுகிறது.

அந்தக் களத்துக்குள் நாஸ்தீகர் களுடன் நான்.

களத்துக்குள் வந்தால் அங்கே அளாப்பல் இருக்கக் கூடாது.

"உண்மை என்றால் உண்மை ... பொய் என்றால் பொய் ... பிறகு ஐயர், ஆரியன், தமிழன் .. அப்படின்னு சளாப் பறதாலே சாதித்துக் கொள்ளும் தாழ் மைகளை இனிமேலாவது நீங்கள் சந்திக்கும் போது வற்றிப் போன அறிவுத் தடாகத்தில் செத் துப்போன மீன்பிடிக்கும் மகான் கள் யார் என்பது புலனாகும்.

நாம் தமிழர்தான். அட ... மந்திரம் தமிழில் இல்லைத்தான். அதற்காக கடவுள் இல் லை ... இந்துசமயம் பொய் என்று சொல்லிக் கொள் ளும் பைத்தியக் காரத் தனம் எம்மிடம் இ ல்லை.

"ஏன் எம் தமிழில் ஆலயத் தில் மந்திரம் இல்லை ... தமிழில் ஆக்கக்கூடாதா? தமிழன் ஒவ்வொருவனுக்கும் இருக் க வேண்டிய ஆதங்கம். ஆராய்வோம் ... தர்க்க நியாயங்களை இருதரப்பிலும் எடுத் துப் பார்ப்போம். அது அறிவுடையவன் செய் யும் காரியம்.

இந்துவாக இருந்து கொண்டே, எம் இந்து சமயத்தை இன்னொருவர் இழிந்து பேச, அதைக் கேட்டு அமைதிப்பட எப் படி இந்துக்களால் முடிகிறது.

காலம் தாமதம் ஆகிறது. இதோ திரை இழுக்கப்படுகிறது. அவசரம் வேண் டாம்...

இது நிஜத்திரை ... முகத்திரையை அகற்ற இ ன்னும் நேரம் இருக்கிறது.

### அன்றைய காலக் கவிதை

நான்
அவளையே நிதமும் நினைத்தேன் -
அவளோ
அவனையே நினைத்தாள் - ஆனால்
அவனோ
இன்னொரு பெண்ணை நினைத்தான்
அந்த இன்னொரு பெண்ணோ
என் காதலுக்காய் ஏங்கினாள் ...
ஏது!
நான் - அவள் ......
அவள் - அவன் ......
அவன் - இவள் .......
இவள் - நான் ......
காதலும் அன்பும் அர்த்தமும்!

(கி.பி.650 அளவில் எழுதப்பட்ட நீதிசாதகத்தில் இருந்து ஒரு கவிதை வடமொழித் தமிழாக்கம்)


**அடுத்த இதழில்**

**நாஸ்தீகர்களுடன் சமரில்**

**proven talent on God's Programming**

**வித்தியாசமான அணுகுமுறை**

God's protection policy arguments using computer programming models

**(கடவுள் இல்லை என்போர் பலர் விஞ் ஞானக் கல்வியின் அடிப்படையிலான காரணங்களை அல்லது வாதங் களையே எதிர்பார்ப்பதால் அந்தக் பக் கத்தில் விழும் ஓட்டைகளையும் அடைக்க வேண்டும் அல்லவா!)**


விவாத அரங்கம் ...

(திரைஇசை நடனத்தை எதிர்பார்த் த ஜனங்கள் லாவகமாகக் கொட்டாவி விட ஆயத்தம். மன்னிக்கவும் .. அப்படிச் சனங் களைப் பழக்கி வைத்திருக்கிறாங்கப்பா.)

பல காலத்துக்கு முன்னரேயே இந்து சமயத்துக்குள் துணிந்து நாஸ்தீகக் கருத் துக்களை வெளியிட்ட சர்வாகனின் ஆசிகளைப் பெற்றுக் கொள்கிறேன். எமது காலத்துக்குள் எல்லோருக்குமே தெரிந்த இ. வே.ரா.பெரியாரை இறைஞ்சிக் கொள் கிறேன். பெரியார் எனது வணக்கத்துக்கு உரியவர். அவர் உருவாக்கிய சமூக விழிப் புணர்வின் முன் அவரின் நாஸ்தீகத் தன்மை எனக்கு என்றும் கண்ணிற்படுவதில்லை. அந் த சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த கடவுள் நம்பிக்கையில் அவர் கைவத்தது சரியா பிழையா என்று பழையதை ஆராயவும் விரும்பவில்லை. அன்றைய சூழ்நிலையில் அதைவிட வேறுவழி அவருக்கு இல் லாமல் இருந்திருக்கலாம். அவரின் சமூக நோக்கு இன்றைய நாஸ்தீக அரசியல் வாதிகளிடம் இல்லை என்பதுவும் உண் மை. இன்றைய சூழ்நிலையில் மக்கள்


**Very soon ....** வெளிவருகிறது ..... (தமிழ், ஆங்கில மொழிகளில்)

**இந்துக் கைநூல்**

**Hindu's Handbook**

உண்மையை உணர்ந்து தெய்வநம்பிக்கை பெறவேண்டும் என்பதே என் கருத்து. இந்து சமயத்தை ஆரியத்துவத்துடன் சம்பந்தப் படுத்தி, அந்த அறிவை முற்றாக அவர் களுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் அறியாமை அகல வேண்டும். அரசியல் வாதிகள் "சொறிந்து" பார்ப்பதற்கு இந் துசமயத்தைப் பயன்படுத்துவதை இனி மேலும் அனுமதிக்கக்கூடாது.

நான் கடவுள் நம்பிக்கை உடையவன்தான். அதற்காக கடவுள் இல் லை என்று கூறுபவனின் கருத்தை அறியவோ, அலசவோ, உண்மை பொய் களை ஜீரணிக்கவோ தயங்குவதில்லை என் றதொரு உறுதியுடன் தொடர்கிறேன்.

என் தமிழை, என் இனத்தை, என் கடவுளை, என் மதத்தை இழித்துரைத்தால் ஏன் என்று கேட்க ஏன் தயங்கவேண் டும்.... இல்லை என்று சொல்ல இன் னொருவனுக்கு உரிமை உண்டென் றால் ... இருக்கிறது என்று சொல்ல எவனுக் குப் பயப்படவேண்டும்?

கடவுள் நம்பிக்கை இல்லாதவனுக் கு, கடவுள் நம்பிக்கை உள்ளவர்களின் செயற்பாடு பற்றிக்கூற உரிமை கிடையாது. அவ்வாறு முயற்சித்தால் அதுவும் ஒருவகை அத்துமீறல் ... அடாவடித்தனம்.

நாம் கடவுளை வணங்குவோம். அந்தக் கடவுள்தான் எல்லாவற்றையும் கொடுத்தார் என்று நம்புவதால் ஆண்டவனுக் கு கோவிலும் கட்டுவோம். எம் இனத்தைக் காப்பாற்று என்று வேண்டி ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்வோம். அவனிடம் மன் றாடுவோம். இது எமது நம்பிக்கை கலந்த உரிமை. நாம் ஒன்றும் மற்றவர்களின் பொருளைப் பிடுங்கி ஆண்டவனுக்கு கொடுக்கவில்லை. எல்லாவற்றையும் தரும் ஆண்டவனுக்கு ஆலயம் அமைப்பது தவறென்றால் ... நாம் சொந்த வீடு வாங் குவதோ ... ஏன் கார் போன்ற ஆடம்பரப் பொருளை வாங்குவதோகூட பெரும் தவறல் லவா!

கடவுளே இல்லை என்று சொல்லி அடிச்சுச் சொல்லி விட்டு, புரியாத மொழியில் கடவுளுக்கு கோவிலில் மந்திரம் சொல்லக் கூடாது என்று போராட்டமும் நடத் தினால் ....

சரி முடிவா சொல்லுங்க .. கடவுள் இருக்கிறது என்று இப்ப சொல் லுறீங்களா .. அப்ப இவ்வளவு காலமும் கடவுள் இல்லை என்று சொல்லினப்போ உங்களை நம்பின ஜனங்க ...? (ரொம்ப பேஷா காதிலை பூ வைக்கப் பழகி இருக் கிறீங்க சாரு. பாராட்டுக்கள். அந்தக் கலையை எங்களுக்கும் சொல்லித் தந்தா உங்களுடைய பாவிக்கப்படாத காதுகளில் நாமும் பூவைத்து விடலாம்!!)

சரி உங்க பாஷையிலே சொல்லட் டுமா! ..... "இல்லாத கடவுளுக்கு தமிழில் மந்திரம் சொன்னா என்ன பிரெஞ்சில் மந் திரம் சொன்னால் என்ன" ... அப்படீன்னு உங்களிடம் கேட்டா?



**கண்மூடித்தனமான சில நம்பிக்கைகள் சமூகத்தின் வளர்ச்சிக்கு பாதகம் விளைவிப்பதைக் கண்ட இ.வே.ரா. பெரியார் கோதித்தெழுந்தார். அதில் நியாயம் இருந்தது. கடவுள் நம்பிக்கையின் அடித்தளத்தில் இருந்த தர்க்கநியாயங்களை அவர் சரியாக அலசினாரா?**

இது என்னுடைய தப்பு. அரசியல் காரங்க சொல்லுறதை வைச்சு விவாதம் ஆரம்பிச்சது.

சரி, நாம நல்ல தமிழில் அறிவியல் ரீதியாக கடவுள் உண்டா இல் லையா... ஆராய்வோமா!

'Summa Theologica' என்ற நூலின் ஆங்கிலம் இவ்வாறு கூறுகிறது.

"It seems that God does not exist, because if one of two contraries be infinitive, the other would be altogether destroyed. But the name God means that he is infininite goodness. If, therefore, god existed there would be no evil discoverable: but there is evil in the world. Therefore God does not exist.

Further, it is superfluous to suppose that what can be accounted for by a few principles has been produced by many. But it seems that everything we see in the world can be accounted for by other principles, supposing God did not exist. For all natural things can be reduced to one principle, which is human reason, or will. therefore there is no need to suppose God's existence.

கடவுள் இல்லை அல்லது இருக்க வேண்டிய அவசியம் இல்லையா என்ற ஒரு கருத்துக்கு பதில்.

*(சிறுமைத்தனங்களுக்கும் பண்புடைய தமிழில் பதிலளிக்கும் பக்குவத்துடன் தொடரும் .......)*

## வெளியீட்டாளர் கருத்து ....

"கனடா இந்து" என்னும் இச் சஞ் சிகையின் நோக்கம் வரவேற்கத்தக்கது. சஞ்சிகை ஆன்மீகத்தினை மீறி சாதாரண வாழ்க்கை விடயங்களிலும் கவனம் செலுத்துவது ஒருவகையில் நன்மை. ஆத்மீகமும் சாதாரண வாழ்க் கையும் இணைவதே இந்துசமயம்.

சஞ்சிகையில் வரும் சில கருத் துக்களுடன் நாம் உடன்படாவிடினும், கருத்துக்கு மதிப்பளிக்கிறோம். எமது பதில் நியாயங்களைத் தர நாம் பின் நிற்கப்போவதில்லை.

பொருளடக்கம் சமய வளர்ச் சிக்கு ஏதோ ஒரு வகையில் உதவுவதாக இருப்பதனால் இச் சஞ் சிகையைப் பிரசுரிக்கும் பொறுப்பை ஆலயம் ஏற்றுள்ளது.

இச்சஞ்சிகை இந்துக்களின் கலை கலாச்சார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என் று பேரருள்மிகு அன்னை ஸ்ரீ துர்க் காதேவி அம்பாளை பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

தியாகராஜாக்குருக்கள்
கணேஷ்சுவாமிகள்
அறங்காவலர் சபைத்தலைவர்,
பிரதம குரு
ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம்



சிங்கப்பூரில்
தயாரிக்கப்பட்ட
22K
தங்கநகைகள்
கிடைக்கும் ஒரே
நகைஸ்தாபனம்

The Leaders in 22K
Gold Jewellery

திறமான வைரத்தை நிர்ணயிக்கும் முக்கிய அம்சங்கள்

- நிறை (Carat Weight)
- நிறம் (Colour)
- தெளிவு (Clarity)
- வெட்டு (Cut)

வைரத் தோடுகளுடன் மதிப்பீட்டுப்
பத்திரங்கள் (Jewellery Appraisal) கொடுக்கப்படும்

செல்வசேகர
SS JC நகை மாளிகை
Selvasegara Jewellers

2347 Eglinton Ave. East, Scarborough, Ontario
*(One Block West of Kennedy)*

**(416) 285-7269**

E-mail: selvasegara@tamilpages.com

"பாற்கடலில் பாம்பணையில் பள்ளி கொண்டான் பரந்தாமன்
வீற்றிருந்த வல்லிபுரம் வினை தீர்க்கும் வைகுந்தம்
போற்றிவரும் அடியவர்காள் போய் வருக பொற்பாதம்
நாற்திசையும் அவன்நாமம் நாம் அறிந்த நல்வேதம்

# ஈழத்துத் திருத்தலங்கள்

# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார்

ஈழத்தில் உள்ள விஷ்ணு ஆலயங்களில் பிரசித்தி பெற்றது வல்லிபுரம். முன்னொரு காலத்தில் ஏறுஇறங்கு துறையாகவும், வர்த்தகப் பரிமாற்ற இடமாவும் விளங்கிய பருத்தித்துறைப் பட்டணத்தில் ஓரமாக இது அமைந்தள்ளது.

சுற்றவர வெண்மணற் பரப்பு. கூப்பிடு தூரத்திலே நீண்டு கிடக்கும் வங்காள விரிகடல் அல்லும் பகலும் "பரந்தாமா" என்று விழிக்கும் நாத ஒலி. அந்த நீலக் கடலின் ஓரத்தில் நீலவண்ணன் நித்திரை செய்யும் அந்த ஸதலம் தான் வல்லிபுரம்.

தமிழ்ப் புலவர்கள் தன்னைப் பாடக் கேட்கவேண்டும் என்று நினைத்தானோ என்னவோ, தன்னைச் சுற்றி "புலவர்ஒலி" என்ற கிராமத்தை சிருஷ்டி செய்துவிட்டான். அதுவே "புலோலி" என இன்று வழங்கப்பெறுகிறது. அருகில் நாகங்கள் வாழும் நாகர் கோவில்.

பலநூறு வருடங்களுக்கு முன்னர், கற்கோவளம் கிராமம் அமர்க்களப் பட்டது. வங்காளக் கடலில் அட்டகாசம் செய்துவந்த மீனைப் பற்றித்தான் எங்கும் பேச்சு. கடலுக்குச் சென்ற மீனவர்கள் எல்லோருடைய வலையையும் இழுத்து அறுத்து அட்டகாசம் செய்தது ஒரு மீன். அரசனுக்கு முறையிட்டார்கள். வித்தை கற்றவர்கள் சென்றும் அந்த மீனை வெல்ல முடியவில்லை. இதனால் மீன் பிடித் தொழிலில் தமது சீவனம் நடத்தி வந்த அந்த ஊரில் வறுமை ஏற்படத் தொடங்கியது. பட்டிணியும் பசியும்.... சிலர் ஊரைவிட்டு வேறு ஊர் செல்ல ஆரம்பித்தனர்.

கற்கோவளத்தில், நாச்சியார் என்னும் பெண் விஷ்ணு பக்தி கொண்டவர். இந்த மீனின் தொல்லை அகலவேண்டும் என பரந்தாமனை நினைத்து கடற்கரையில் நிஷ்டையில் இருந்தார். "நாராயணா நம: நாராயணா நம" என்று பரந்தாமனைக் குறித்து மூன்று நாட்களாக அன்ன ஆகாரம் இன்றி இருந்தார் நாச்சியார்.

கடல் இரைந்தது. அலை உயர்ந்தது. கடல் பெருக்கெடுத்து நாச்சியார் நிஷ்டையில் இருந்த இடம் வரை வந்தது. அந்த மீன் நாச்சியாரின் மடியில் அமர்ந்தது. "பரந்தாமா" என்று கூறி அந்த மீனைக் கையால் தூக்கினார் நாச்சியார். என்ன ஆச்சர்யம்! மீன் சங்காக மாறியது.

நாச்சியாரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. இந்தச் சேதி கேட்டு அந்த ஊரே கடற்கரையில் திரண்டுவிட்டது. இந்தச் சங்கை பல்லக்கில் சுமந்த வண்ணம் அரசனுடைய அவைக்குச் சென்றனர். கங்கோவளத்தில் இருந்து கடற்கரை வழியாகச் சென்றவர்கள், ஆனைவிழுந்தானையும் கடந்து வல்லிபுரம் ஊர் வந்து சேர்ந்தனர். தமது தாக சாந்தி செய்ய, பல்லக்கைக் கீழே வைத்துவிட்டு அருகில் இருந்த குளத்துக்குச் சென்றனர். திரும்ப வந்து பல்லக்கைத் தூக்க முயற்சி செய்ய போது, பல்லக்கு அசையவில்லை. பல்லக்கைத் திறந்து பார்த்த போது உள்ளே இருந்த சங்கு சக்கரமாக மாறிவிட்டது.

அந்தச் சக்கரம்தான் இன்றும் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் கர்ப்பக் கிரகத்தில் உள்ளது. நாச்சியாருக்கும் அங்கு வணக்கம் நடக்கிறது. ஆலயத்தில் உள்ள சலுகைகள் இப்போதும் கற்கோவளம் ஊர்மக்களுக்கே வழங்கப்படுகிறது.

இதுதான் வல்லிபுர ஆழ்வாரின் ஸ்தலம் தோன்றிய வரலாறு. கர்ணபரம்பரை வரலாற்றில் ஒருசில பேதங்கள் இருப்பினும் அடிப்படை வரலாறு ஒன்றாகவே இருக்கிறது. வடமராட்சியில் கற்கோவளம், புலோலி, வராத்துப்பளை, தும்பளை போன்ற கிராமங்களில் இப்போதும் வல்லிபுர ஆழ்வார் பற்றிய பல அற்புதங்களையும் சிறப்புக்களையும் கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது.

வல்லிபுர ஆழ்வாரின் சுற்றுப்புறக் கிராமங்களில் உள்ள அகழ்வுகளும், கட்டிட சிதைவுகளும், கண்டெடுக்கப்பட்ட பொருட்களும் இந்தப் பகுதியின் புராதனச் சிறப்பைக் கூறுகின்றன. இந்தப் பகுதிக்கு விஜயம் செய்ய வந்த பௌத்த பிக்குகளை மதம் மாற வைத்து இந்துக்களாக்கிய ஸ்தலம் இது என்றும் சில கர்ண பரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன.


கனடா
இந்து

வெளியீடு
ரொறன்ரோ
ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம்

நிர்வாகம்
Canada Hindu
Publications

கணனி அச்சுரு
அமைப்பு
வரைகலை
முகப்பு வரைகலை
ஆக்கம்
கிருஸ்ணா சிவப்பிரகாசம்

**This issue is published by:**

**Sri Durka Hindu Temple**
**30 Carnforth Road**
**Toronto, Ontario**
**Canada. M5A 2A7**

**Tel : (416) 759 9648**



# தமிழ் சினிமாவும் இந்துக் கலாச்சாரமும்

சென்னை, தமிழ்நாடு

"........ தமிழ் சினிமா என்றால் கவர்ச்சி. அப்படீன்னுதான் ரொம்ப ஜனங்க இப்ப சொல்லிக்கிறாங்க. இப்ப வருகிற படங்கள் எல்லாவற்றிலும் ஜாஸ்தியாக செக்ஸ்தான் இருக்கிறது. அது தப்பினா றௌடிங்க சண்டை, அதுவும் இல்லைன்னா அரசியல்வாதிங்க பழிவாங்குவாங்க .. சினிமா என்கிறது ஜனங்களைக் கெடுக்கிற முதலாவது எதிரி ......"

இப்படியாக நடுத்தரவர்க்கத்தைச் சார்ந்த குடும்பப் பெண் ஒருவர் சொன்னார். அவங்க சொன்னதை ஒரு இளவட்ட மாணவரிடம் சொன்னோம்.

"...... கம்பியூட்டர், இன்டநெட் இப்படியாக ரொம்ப முன்னேறி வாற காலத்திலே பழைய காலத்தைய நெனைப்போட சிலபேர் இருக்காங்க. ஆனா.. என்னோட கருத்தைச் சொன்னா, சினிமாவிலை இந்தக் காலத்துக்கு ஏத்த மாதிரி விஷயங்கதான் இருக்கிறது. அது தப்பில்லை. செக்ஸ் எண்டு புதுசா ஒண்ணும் கிடையாதுங்க. நடக்கிற விசயங்களை ரியலிஸ்டிக்கா காட்டுறாங்க. இது ஜனங்களைக் கெடுக்கிறது என்கிறதெல்லாம் சுத்தப் பேத்தல் ..... "

என்றார்.

அரைகுறையாக உடுப்பு அணிந்து வருவது. எங்களுடைய சமய கலாச்சாரங்களுக்கு கெடுதல் விளைவிக்காதா? என்று கேட்டோம்.

".... என்னங்க அது அரைகுறை ஆடை. உங்களை ஒண்ணு கேட்கலாமா! சினிமாவிலைதான் அப்படி உடுப்பு போடுறாங்களா. தமிழ் சினிமாவிலை அப்படி உடுப்பு போடலைன்னா, தமிழ் இந்துப் பெண்கள் எல்லாரும் பதினாறு கஜம் சீலைதான் அணிவார்களா? கலாச்சாரம் உடுப்பாலை கெடாதுங்க சார். மனம்... மனம்தானுங்க இங்கை முக்கியம். சினிமாவிலை பலாத்காரம், பயங்கரவாதம் போன்றவை சற்று அதிகம்தான். அதுகூட தமிழ் சினிமாவிலை வாற சண்டைகள் துட்ட நிஸ்கிரக சிஸ்ட பரிபாலனம் என்பதுக்குள் அடங்கிவிடுகிறது ....."

இந்த இளைஞரின் வாதத்தை முழுமையாக அங்கீகரிக்க முடியுமா?

ரொறன்ரோ, கனடா

அரைகுறை ஆடையுடன் வருவதுதான் பாஷன் என்று நினைக்கிற காலத்திலே தமிழ் இந்துப் பண்பாடாக, முழு ஆடையுடன் ஒரு நடிகை. அதில் உள்ள அழகும் அடக்கமும் இன்று பலபேரைச் சிந்திக்க வைத்திருக்கிறது.

அவர்தான் நடிகை தேவஜானி.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பதை இந்த நடிகை தனது கதாபாத்திரங்களில் தேவையான அளவுக்குத் தந்திருக்கிறார். இந்த நடிகையின் படங்களைப் பார்த்த பின்னர் ரொறன்ரோவில் பல இளம் பெண்கள் மத்தியில் முழுப்பாவாடை தாவணி, சேலை, முழுநீள அணிகள் போன்றவை இப்போது பிரபல்யமாகி வருகிறது. இளைஞர்கள் மத்தியில் தேவயானியின் உடைஅலங்காரம் பேசப்படுகிறது.

"... உண்மையிலேயே, இது ஒரு திடீர் மாற்றம். அந்த நடிகைக்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்......."

என்று நம்பிக்கையோடு தெரிவித்தார் மூன்று இளம் பெண்களின் தந்தை ஒருவர்.

ரொறன்ரோவில் ஒரு மாணவியைச் சந்திக்கிறோம்.

"..... இந்த மாற்றம் ஒரு நிரந்தரம் என்று சொல்ல முடியாது. இந்தியாவிலை சரி இங்கு ரொறன்ரோவிலை சரி,

பாஷன் காலத்துக்கு காலம் மாறித்தான் இருக்கிறது. இந்த பாஷனைத் தீர்மானிக்கிறது ஓரிரு விஷயம் இல்லை. 'பாஷன் ஷோ' வுகள் சில நேரங்களில் திடீர் மாற்றத்தை விளைவிக்கும். பொப்பியூலர் ஆனவர்களின் அடையணிகள் கூட இளைஞர்கள் மத்தியில் ஒரு வேகத்தை உருவாக்கும். ரொறன்



ரோவில் தமிழ் பெண்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் திரைப்படங்கள் அதிகதாக்கம் கொடுக்கிறது. மேலைத் தேசத்தில் ஏற்படும் பாஷன் மாற்றங்

கள் உடனடியாகத் தமிழ்ப் பெண் களைப் பாதிப்பதில்லை. இந்த மாற்றங் கள் தமிழ்நாட்டு பிலிம் இன்டஸ் றியினூடாக எங்களை வந் தடைவதுதான் தற்போது நடக்கிறது.

தேவஜானியின் தனித்துவமான உடையலங்காரம் பல பெண்களில் மாற்றம் ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மை. ஆனால் இன்னும் ஓரிரு வருடங்களில் இன்னொரு நடிகை அழகாகவும் கவர்ச்சியாகவும் இருந்து, அந்தப் பெண் முக்கால்குறை உடுப் புடன் வந்தால், அன்றைய பாஷன் அதுவாகிவிடும்.

என்டர்ரெயின்மன்ட் இன்டஸ் றி இந்த வகையான பாஷன் மாற்றத் தில் தங்கள் வருமானங்களைப் பெருக் கிக் கொள்ளும்போது, சமயம் மொழி கலாச்சாரம் பற்றிச் சிந்திக்கப் போவதில்லை. இங்குள்ள என் வயதுடைய இளம் பெண்கள் தமிழ் சமயம் போன்றவற்றுக்கு மதிப்பளிப் பதாக கூறமுடியாது. இப்பெண்களை சமயம், கலாச்சாரம் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் என்றும் சொல்லமுடியாது ...

அதைவிட முக்கியமான விடயம். முழுக்க மூடிய ஆடைகளுடன் வரும் நடிகைகளின் அந்தரங்க வாழ்க்கை, அரைகுறை ஆடைகளுடன் வரும் நடிகைகளின் அந்தரங்க வாழ்க்கையிலும் கேவலமாக இருப்பதை நீங்கள் கவனிக் கவில்லையா?"

இந்த யதார்த்தமான கருத்து சிந்திக்க வைக்கிறது. இளம் தலைமுறைக்கு இப்போது சமயம் தமிழ் சில இடங்களில் போதிக்கப்படுகிறது. ஆனால் இந்தப் போதனைகள் சுமையாகக் கருதாமல், ஒரு ஈடுபாட் டையோ, சமயத்தின் மீதுள்ள மதிப்பை அதிகரிப்பதாகவோ அமைகிறதா? நம் மை நாம் கேட்டுக் கொண்டால் .....

- சினி சேஷன்

**ஆலயங்களின் அமைப்பு சக்திகளை உறிஞ்சி வைத்திருக் கும் சிறப்புடையதா?**

எகிப்திய பிரமிட்டுக்களை ஆராய்ந் தபின் வெளிவரும் சில தகவல்கள் புராதன காலத்தில் இருந்த தொழில்நுட்பத்தை ஊர் ஜிதம் செய்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக் கு முன்னர் அமைக்கப்பட்ட பிரமிட்டுக்கள் அன்றைய காலத்தில் வாழ்ந்தவர்கள் அங் கே கதைத்த பல விடயங்களை உறிஞ்சி வைத்திருப்பதை நுட்பமான கருவிகளினால் கேட்கமுடியும் என்று கூறப்படுகிறது. இதே போன்று இந்தியாவில் சில சித்தர்கள் வாழ் ந்த குகைகளுக்குள் இப்போதும் சில சத் தங்களைக் கேட்க முடிகிறதாம். பழைய ஆலயங்களின் அமைப்பிலும் இந்தச் சிறப் பு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

# அடுத்த இதழில்

# ஈழத்தமிழர் சினிமா ஏற்றம் பெற .....

**உங்கள் கருத்துக்களை எழுதி அனுப் புங்கள்....**

## நல்ல நியாயம்

*ஒரு நண்பர் ;*
*என்னடாப்பா ... கடவுள் இல்லை.. இல்லை என்னு சொல்லுறீயே .. ஏன் அப்படிப் பிடிவாதமா நிக்கிறே*

*மற்ற நண்பர் ,*
*நான் செஞ்சிருக்கிற வேலையளுக்கு கடவுள் எண்டு ஒருவர் இருந்திட்டா பெரிய தண்டனை தந் துடுவாரு. கடவுள் இல்லை இல்லை என்னு சொல் லிக்கிட்டிருந்தா பயமும் இல்லை ... இன்னும் துணிச் சலா செய்யிற கெட்ட வேலை எல்லாத்தையும் செஞ் சிடலாம்.*

## "கௌரவம்"

எமது ஒவ்வொரு இதழிலும் சிலதுறைகளில் திறமைகளைப் பதித்தவர் களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து "கௌரவம்" அளிக் கிறோம். திறமைஉள்ளவர்களைத் தேடிச் சென்று கௌரவம் அளிப்பவர்கள் மிகக்குறைவு. தமக்குத் தெரிந்தவர்களை, வேண்டியவர்களை "விலாசப்படுத்துவது" இங்கே கௌரவம் என்றும் விருது என்றும் கருதப்படும் காலத்தில், சில திறமைகளை அடையாளம் கண் டு வாழ்த்துக் கூறுவதில் பெருமை அடைகிறோம்.

தமிழ்க் கவிதைத் துறையில்

## பா. அ. ஜயகரன்

இவருடைய கவிதைகள் வாழ்க்கையின் நிஜங்களை சித்தரிப்பவை. மனிதம், மனித நேயம் என்ற வரையறைக்குள் தன்னை ஆளுமைப்படுத்திக் கொண்ட கவிஞர் பா.அ.ஜயகரன் ஒரு ஜனரஞ்சகமான கவிஞர் அல்ல என்பது உண்மை. "ஜனரஞ்சகம் ஆகவேண்டும் என் பதற்காகவே கவிதை எழுதும் வட்டத்துக்குள்" இருந்து தன்னை விலத்தி வைத்திருப்பவர் என்றும் கூறலாம். இயற்கையைக் கவிதைக்குள்கொண்டுவரும்போதுகூட, அங்கே மனித வாழ்க்கையின் ஏதோ ஒரு அங்கம் தலைகாட்டும். கருத்தும் கவித்துவமும் அடங்கிய கவிதைகளைப் பிரசவிக்கும் ஒரு அற்புதக் கலைஞன். ஆடிக்கொருதரம் ஆவணிக் கொருதரம் எங்காவது இவரின் கவிதை பிரசுரமாகி இருக்கும். அதில் எந்தவொரு கவி-தயும் "மசாலா"த் தனமானதல்ல. அவை நிஜங்களின் பதிவுகள். இவரின் கருத்து நிலைப் பாடுகள் சர்ச்சைக்குரியனவாயினும், "திறமை" கௌரவம் பெறவேண்டியது. அவருக்கு எமது வாழ்த்தினைத் தெரிவித்து கௌரவம் அளிக்கிறோம்.

வானொலி இலக்கியத்துறையில்

## கலாதரன்

இலக்கியம் என்பதை இரசிக்கத்தான் முடியும் என்று நினைத்திருந்தது ஒருகாலம். அந்த எண்ணத்தினை கனேடியத் தமிழ் மக்களில் மாற்றி அமைத்தவர் கலாதரன் அவர்கள். கல் வியறிவில் எழுந்த இலக்கியத்திலும் அனுபவத்தில் வரும் இலக்கியம் சுகந்தம் உள்ளது. அந்த சுகந்தத்தினை அள்ளி வருபவராக மட்டும் இல்லாது, அதனை உருவாக்கும் சக் தியை சாதாரண மக்களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். கற்பனை- கவிதை - இ லக்கியம் என்பதைச் சகலருக்கும் பொதுவாக்கியது புதுக்கவிதையாக இருக்கலாம். அந் தப் புதுக்கவிதை பொதுவானது என்பதைச் செயலாக்கியவராக உள்ள கலாதரனைப் பாராட்டுவதில் பெருமை கொள்கிறோம். கவிதை உலகில் அன்றி, கருத்துலகிலும் மிகத் திறம்படச் செய்துவருவது மகிழ்ச்சிக்குரியது. "கௌரவம்" பெறவேண்டியர் இவர். வாழ்த் துக்கள் கலாதரன்.

# திருமண சடங்குகள்

## திருமணம் ....
## திருமணம் ...

இந்துத் திருமண சடங்கு சம்பிரதாயங்கள், இடத்துக்கு இடம் சற்று வேறுபட்டாலும், அடிப்படைத் தத்துவம் மாறுவதில்லை. சடங்குகளுக்கு அர்த்தம் உண்டு. சடங்குகளில் உபயோகிக்கப்படும் பொருட்களுக்கு விசேடம் உண்டு. வெறும் அழகுக்காக வைக்கப்படும் பொருட்கள் அவை என்று சிலர் நினைத்துவிடுகிறார்கள். அலங்காரப் பொருட்கள் அழகைப் பிரதிபலிப்பனவாக இருக்கலாம். அது சம்பிரதாயத்தைச் செயற்கையாக்குவதாக அமையக்கூடாது.

ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ

அறுகம்புல் கிடைக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். அதற்காக, அது போல உள்ள இன்னொரு புல்லையோ, அல்லது செயற்கையாக தயாரித்த புல்லையோ பயன்படுத்தலாம் என்ற எண்ணம் ஏற்படலாகாது. சில பொருட்களுக்குச் சில பிரதியீடுகள் இருக்கலாம். இந்தப் பிரதியீடுகள் இந்து சமயத்தினால் அனுமதிக்கப் பெற்றதாக இருப்பதுவே சிறப்பானது.

ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ

கனடா போன்ற மேலைத் தேச நாடுகளில் சடங்கு சம்பிரதாயத்துக்கு உரிய பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் சில சிரமங்கள் ஆரம்ப காலத்தில் இருந்தன. தற்போது அநேக பொருட்கள் இறக்குமதி செய்யப் பெறுகின்றன. இதனால் தற்காலத்தில் திருமணவீடுகள் சமயவழக்குகளுக்கு உட்பட நிகழ்த்துவது கஸ்டமான காரியம் அல்ல.

ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ

திருமணச் சடங்கு பற்றி போதாயன முனிவர் கூறிய செய்தி சற்று சிந்திக்க வைப்பது.

“திருமணச் சடங்குதான் ஒரு பெண் இன்னொரு ஆணைத் திருமணம் செய்ததை உறுதிப்படுத்துகிறது. திருமணச் சடங்குகள் இல்லாமல் ஒரு பெண் இன்னொரு ஆணுடன் வாழ்ந்தாலும், அந்தப் பெண் ஒரு கன்னியாகவே கருதப்படுவாள். அவ்வாறு வாழ்ந்த பெண் இன்னொரு ஆணைத் திருமணம் செய்யலாம்”

இது பற்றிய இன்னொரு கருத்து. காதல் திருமணமாக இருந்தால் என்ன ... கட்டாயத் திருமணமாக இருந்தால் என்ன ... திருமணச் சடங்கு அவசியம். திருமணத்துக்கு முன்னரே பெண் கன்னித் தன்மை இழந்தாலும்கூட, அல்லது குழந்தை தரித்துவிட்டால்கூட திருமண சடங்கு அவசியம் என இந்து தர்மம் சொல்கிறது.

ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ

திருமணத்தின் முக்கிய கட்டம் தாலி கட்டுதல் என்று பலர் நினைக்கிறோம். உண்மையிலே, இந்து சமய நூல்கள் பலவற்றின் படி சப்தபதி (ஏழடி வைத்தல்) திருமணத்தின் பிரதான சடங்காகக் கருதப்படுகிறது. சப்தபதி இல்லாமல் திருமணம் பூர்த்தியானதாக அமையாது.

ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ

தாலி கட்டுவதற்கு முன் மணப்பெண்ணின் தலையை மொட்டாக்கு இட்டு வருதல் இந்து சமய சம்பிரதாயம் அல்ல. பெண் தலை குனிந்தவாறு வருதலும் தாலி கட்டும் வரை தலை பணிந்து இருத்தலுமே தென்னிந்திய திராவிட இந்துக்கள் வழமை. வட இந்தியாவிலே மொகலாய ஆட்சிக்குப் பின்னர் பல திருமண சடங்குகள் மொகலாயர்களின் முறைகளைத் தழுவியதாக அமைந்தது. ஆயினும் இன்றும் தென்னிந்தியாவிலே மொட்டாக்கு இடும் வழமை இல்லை.

இலங்கைத் தமிழ் மக்களிடையே மொட்டாக்கிடும் முறை எப்படி வந்ததென்பது தெரியவில்லை.

ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ

தாலியை எந்த நேரமும் அணிந்திருப்பதை கனடாவில் பல பெண்கள் விரும்புவதில்லை. இதற்குக் காரணங்கள் பல கூறுகின்றனர். இங்கே தாலி என்று கூறுவது தாலியைச் சுமந்திருக்கும் கொடியை அல்ல. தாலிக்கொடி பெரிதாக இருப்பதனால் அதை அணிவது அசௌகரியமாக இருக்கலாம். ஆனால் தாலி என்பது சிறியது. அதை சங்கிலில் போட்டிருக்கலாம். தாலியைச் சங்கிலியில் போடுபவர்கள், சங்கிலியைச் சற்றுப் பெலப்பானதாகச் செய்து வைத்திருக்கலாம். முக்கியமாக கணவனும் மனைவியும் தனித்திருக்கும் நேரங்களில் தாலி அவசியம் என சில சமயநூல்கள் கூறுகின்றன. தாலி என்பது தேவர்கள் முன்னிலையில் மந்திரிக்கப்பெற்றது. கண்ணுக்குப் புலப்படாத தீய சக்திகள் எதனாலும் பெண்மை தீண்டப்படாதிருக்க தாலி பாதுகாப்பைத் தரும்.

ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ

திருமணசடங்கு நடக்கும் இடத்தில் சுற்றவரக் கோலம் போட வேண்டும். இது அழகுக்காக மட்டும் அல்ல. கோலத்தைத் தாண்டி இராட்சத சக்திகள் உள்ளே வராது எனக் கூறப்படுகிறது. கனடாவில் நிகழும் திருமணங்கள் பலவற்றில் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவதில்லை. வீட்டு முற்றத்தில் கோலம் போடும் வழக்கம் இந்தியாவில் இருக்கிறது. இலங்கையில் அந்த வழமை அருகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ ꩧ

திருமணங்களில் மணமகன், மணமகள் இருவரின் மனத்துக்கும் முழுமையான சுதந்திரம் கொடுக்க வேண்டும். மணமக்கள் தம்மைத்தாம் ஒருவரை ஒருவர் அங்கீகரிக்கும் நிலைமை உருவாக வேண்டும். தமது வாழ்க்கையில் ஒரு கெட்டியான இணைப்பை மனத்துக்குள் உருவாக்கி வைக்க வேண்டும். இதனால்தான் சடங்கு சம்பிரதாயங்கள் அமைகின்றன. அந்த சடங்கு சம்பிரதாயங்களை முடிந்


இது ஒரு புதிய வழி:

கனடாவில் நடக்கும் திருமணத்தை இலங்கையில் உள்ள பெற்றோர் இன்ரநெட்டில் பார்க்க, இலங்கையில் உள்ள பெற்றோர்களை கனடாவில் இருந்து இன்டநெற்றில் மூலம் பார்த்து ஆசீர்வாதம் பெற, அந்தக் காட்சியை மணவறையின் பக்கத்தில் உள்ள பிரமாண்டமான திரையில் யாவரும் பார்த்துமகிழ .......

மிகவிரைவில் எதிர்பாருங்கள். தொழில் நுட்பம் சடங்குடன் இணைகிறது.

தவரை இயற்கையாக அமைய வழிவகுக்க வேண்டும்.

கனடாவில் அதிக திருமணங் களில் இயற்கையான சூழல் தரப்படுவதில் லை.

சில திருமணங்களில் தாலி கட் டுவது வீடியோவில் விழவில்லை என்பதற் காக, இன்னொரு முறை கட்டுறமாதிரி நடிக் க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டும் இருக் கிறது. இது, திருமணம் வீடியோவுக்காக என்கிற எண்ணத்தை உருவாக்கிவிடுகிறது. மணமகனும் மணமகளும் பரிமாறிக் கொள் ளும் வாக்குறுதிகள், வாழ்த்துக்கள் எல் லாம் மனத்தைத் தொடுவதாக அமையாமல் வெறும் நடிப்பாக அமையும் சூழல் திருமண வீடுகளில் உருவாகுவதை நாம் தவிர்க்க வேண்டும்.

தற்காலத்தில் கனடாவில் திருமண நிச்சயங்கள் பல "காந்தர்வ" முறையைத் தழுவியது. 'ஒரு ஆணும் பெண்ணும் ஒருவர் மேல் ஒருவருக்குள்ள கவர்வினால் பாலியல் உந்துகைக்கு உள்ளாகி இணைதல்'. இந்த முறையான திருமணத்தினை சிலர் சிறந்தது எனக் கூறுகின்றனர். ஆணும் பெண்ணும் தமது விருப்பத்துக்கு அமைய சோடியைத் தீர்மானிப்பது நல்ல முறை என்பது சிலரின் வாதம். ஆனால் இந்து சமயத்தில் இந்த முறை தரம் குறைந்ததாகக் கருதப் படுகிறது. பாலியற் கவர்ச்சி புரிந்துணர் வல்ல என்ற விவாதம் முன்வைக்கப் படுகிறது.

பாலியல் உந்துகை நிலையான தல்ல என்றும், அவ்வாறான உந்துகைக்கு உட்படும்போது தம்மைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள், தொடர்ச்சியாக நம்பிக் கைக்கு உரிய வகையில் இருப்பார்களா என்றும் கேள்வி எழுகிறது. காந்தர்வ மணமும் காதல் திருமணமும் ஒன்றல்ல எனச் சிலர் தெரிவிக்கின்றனர்.

காதல் திருமணம் எப்போதுமே பாலியல் உந்துகையால்தான் ஏற்படுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. பாலி யல் சிந்தனை அற்ற எத்தனையோ காதல் இருந்திருக்கிறது என்பதும் காதலுக் காக உயிர்நீத்ததும் நிஜம்.

ஒரு ஆண் பல பெண்களுடன் பழகி அல் லது ஒரு பெண் பல ஆண்களுடன் பழகி அதில் தனக்கு ஏற்றவரைத் துணையாகக் தேடிக் கொள்ளும் மேலைத்தேச வழமை இந்து சமயத்தில் உள்ள எட்டு விதமான திருமணங்களில் அடங்கவில்லை. அது ஏற்றுக்கொள்ளப்படவும் இல்லை. நட்பு என்ற வரைமுறைக்குள் தாம்பத்யத்தை நிர் ணயிக்க முடியுமா?

# இவரின் வாழ்க்கையில் ....
# இந்துசோதிட விளக்கம்

## பில் கேட் (Bill Gates) Chairman & CEO of Microsoft



கல்வி, தொழில், செல்வம், புகழ் இ வையெல்லாம் தனிமனிதனின் முயற்சியால் மட் டும் வருவதல்ல. காலம்... இது ஒரு முக்கிய காரணம். அந்தக் காலத்தினைச் சரியான முறை யில் புரிந்து சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளும் போது சகலமும் வந்து அமையும். இ துதான் சோதிடத்தின் உண.மையான தார்ப்பர்யம்.

1955ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ம் திகதி பில் கேட் என்பவர் பிறந்தார். யார் இந்த பில் கேட்? இன்றைய கம்பியூட்டர் யுகத்தின் நாயகன். இவருடைய இலக்கினமும் இலக் கினாதிபதி அமைந்த இடமும் இந்த மனிதரின் கொடை உள்ளத்தைக் காட்டுகிறது. இலக்கின அதிபதியாகிய சந்திரன் தர்மஸ்தானத்தில் இருக் க, இலக்கினம், அதிஸ்டஸ்தானம் இரண்டிலும் உள்ள சர்வாஸ்டக பரல்கள் மிக அதிகமாகவே உள்ளன.
இலக்கின பரல்கள் 36.
அதிஸ்டஸ்தான பரல்கள் 37.

ஒருமனிதனின் உள்ளே உள்ள சக் தியை இந்தப் பரல்கள் குறிக்கின்றன. இ ந்த சக்தியை வெளியே கொண்டு வருவதுதான் திசைகள், கோசார பலன் கள்.

| | | | |
|---|---|---|---|
| சந் | 10 | கேது | 12 |
| 8 | சுக் - ஆட்சி<br>புத - ஆட்-உச்<br>சனி - உச்சம்<br>உத்திரட்டாதி | | லக் |
| 7 | | | வியா |
| 6 | ராகு | சூரி சுக்<br>சனி | செவ்<br>புத |

அதிஸ்டஸ்தான அதிபதியாகிய சுக்கிரன் ஆட்சி பெற்று கேந்திரம் பெற் றுள்ளமை இவருக்கு இன்று ஏற்பட்டுள்ள செல்வாக்கின் காரணத்தைப் புரிய வைக் கிறது.

அதே நேரம் அதே சுக் கிரனுடைய திசை 1981ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டு வரை உள்ளது.

அந்தக் காலப்பகுதியில் இவரின் புகழ் கொடிகட்டிப் பறக்கும் என்பதும் உண்மை. 1975ம் ஆண்டு ஹாவார்ட் பல் கலைக் கழகப் படிப்பை இடையில் விட்டு தனது 20ம் வயதில் கணனி மெதுகலத் துறைக்குள் இறங்கினார் பில்கேட். 1974ம் ஆண்டு வரை இருந்த புத திசை காப் பாற்றி வந்த கல்வியை 12ம் இடத்தில் இருக்கும் கேதுவின் திசை மழுங்கடித்தது. 1974ம் ஆண்டு முதல் 81ம் ஆண்டு வரை கேது திசை இருந்தது.

1981ம் ஆண்டு சுக்கிரதிசை ஆரம்பித்தது. மிகச்சக்தி வாய்ந்ததாக அமைந்த சுக்கிரதிசையில் தனது புதிய திட்டங்களில் கால் பதித்தார் பில்கேட். அவை அனைத்தும் வெற்றியாகின. சுக்கிரதிசை சாதாரணமாவே நன்மை அளிப்பது. ஆனால் சுக்கிரன் பலம் பெற்று இருப்பவர்களுக்கு மிகச்சிறந்த பலனை அளிப்பான் என்பதற்கு இது ஒரு உதாரணம். ஏழரைச் சனி என்றால் மிகுந்த பாதகத்தை விளைவிக்கும் என்று பலர் கருதுகிறார்கள். உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந் த இவருக்கு கடந்த காலமாக நிகழ்ந்த ஏழரைச்சனி பெரிய பாதகங்களை விளைவிக்கவில்லையே என்று பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். திசையும் ஜனன கிரக அமைப்பும், சக்தி வாய்ந்ததான பரல்களும் அமைந்தபோது, ஏழரைச் சனியும் பாதிப்பை ஏற்படுத்தாது. இதனால்தான் இராசி பலன்களை வைத்து எவரும் மனச் சஞ்சலம் அமைக்கூடாது என்று கூறுவார்கள். முழுமையான ஜாதகம் தான் பலனைத் தீர்மானிக்கும்

2001ம் அண்டு நடுப்பகுதியின் பின்பு ஆரம்பிக்கும் சூரியதிசை இவருக்கு நல்லதா என்ற கேள்விக்குப் பதில் சற்று மனதுக்கு இடைஞ்சலானது. சுக்கிர திசையில் அமைந்தமை போன்று தொடரும் என்று கூறுவதற்கில்லை. பல போட்டிகளை எதிர்நோக்க நேரிடும். இந்தப் போட்டிகளில் சில சந்தர்ப்பங்களில் தோல் விகளையும் எதிர்நோக்கவேண்டியிருக்கும். இழப்புக்கள் தொடரலாம். இந்தத் தோல் விளை வெற்றியாக்க முடியாதா? சுக்கிரன் சந்திரன் போன்ற கிரகங்களின் ஆதிக்கத் தின் கீழ் உள்ள நாடுகளில் தனது திட்டங்களைப் பலப்படுத்தி மேற்கொண்டால் சூரியதிசையின் பிடியில் இருந்து தளர்த்திக் கொள்ளலாம். அல்லது சூரியனுக்கான பல சாந்திகளையும் பூஜைகளையும் செய்துவரவேண்டும்.

## ஆடு அம்பலம்

விரதம் என்பது ஒரு வகையான தவம். அநேகமான இந்துக்கள் அதை ஒரு சடங்காகவே கருதுகிறார்கள். ஏதோ, காலையில் சாப்பிடாமல் இருந்து பின் பகலில் ஆறு சைவக் கறிகளுடன் ஒரு மாறுதலாக உணவு உண்பதாகவே பலரின் விரத அனுசரிப்பு இருக்கிறது. இவ்வாறு விரதத்தை அனுஷ்டித்தால் அதற்கான பேறு கிடைத்துவிடும் என நினைக்கின் றனர்.

ஆறுநாள் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் போது, பாரணை முடிந்த அடுத்த நாள் நல்லதொரு ஆடு பங்கு போடுவது பற்றிக் கதைக்க ஆரம்பித் துவிடுவதைப் பலர் கண்டிருப்பீர்கள். இது மிகவும் தவறான செய்கை. இவ்வாறான சிந்தனையுடன் விரதம் இருப்பது பிரயோசனம் அற்றது. இதற்குப் பெயர் விரதம் அல்ல.

இப்படியான கருத்தை ஒரு இந் துப் பெரியவரிடம் தெரிவித்தபோது அவர் என்ன கூறினார் தெரியுமா?

"இப்படி எல்லாம் செய்வது தப்பு என்று சொன்னால் விரதம் பிடிப்பவர்களும் விலகி விடுவார்கள்"

என்றார்

கசப்பான உண்மை.

நிஜமான கூற்று.

தலை குனிய வேண்டியது யார்?

# உண்மை உரை களம் விருந்து

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼

## எக்கரைக்கும் எக்கரையிலும் பச்சை இலை!

அண்மையில் வெளிவந்த ஒரு ஆங்கில சஞ்சிகையில் மேலைத்தேசத்தவர் கள் பலர் மாமிச போசனத்தைக் கைவிட் டு தாவர உணவு உண்பவராக (வெஜி ரேறியன்) மாறி வருவதைப் பற்றி எழுதியிருந்தார்கள். இறைச்சி வகைகளை மூலமாகவைத்து உணவு தயாரிக்கும் உணவகங்களின் எதிர்காலம் பற்றிச் சந் தேகம் தெரிவித்திருந்தார்கள். மாணவர்கள் , அதிலும் பொதுவாகப் பெண் மாணவிகள் மாமிச உணவைத் தவிர்ப்பது அதிகரித்து வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இன்னும் சில காலத் தில் இந்திய உணவகம்தான் மேலைத் தேசத்தில் இருக்குமோ என்று கருத்துத் தெரிவித்திருந்தார்கள்.

கனடாவில் குடியேறிய இந்துக் கள் மத்தியில், மாமிசம் இல்லாவிட்டால் சாப்பாடு இறங்காது என்று புலம்புபவர் களின் தொகை அதிகரித்து வருவது போல் தெரிகிறதே!

தம் சிறப்புத் தமக்குத் தெரியாது!

▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼

## உலகை ஆளப்போகும் ஈழத்தவர்?

பல மேலைத்து தீர்க்கதரிசிகளின் கருத்துக்களில் உலகத்தினை ஆள இருப் பவர்கள் கீழைத் தேசத்தவர்கள் எனவும் அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் எனவும் கூறப்பட்டிருக்கிறது. முக்கியமாக 500 வருடத்துக்கு முன் வாழ்ந்த நொஸ் ரடாமஸ் என்ற பிரபலமான தீர்க்கதரிசி இது பற்றி விளக்கமாக எழுதியிருக்கிறார். அவருடைய விளக்கங்களையும் தற்போது உள்ள உலகப் போக்கினையும் பற்றி ஆராய்ந்த ஒரு ஈழத்தவர், பல காரணங் ளையும் விளக்கங்களையும் தந்து அந்த உலகத்தை ஆளப்போகும் இனம் பற்றித் தெரிவித்திருக்கிறார். அவருடைய கருத்துக் களில் மிக ஆணித்தரமான தர்க்கம் காணப்படுகிறது. "ஏன் உங்கள் ஆராய் சியை வெளிப்படுத்தக்கூடாது"

என்று அவரிடம் கேட்டபோது,

"நான் சொல்லித்தான் மேலைத் தேசத்தவர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை: அவர்களுக்கு ஏற் கெனவே அந்தச் சந்தேகம் இருக்கிறது. இந்து சமயம் உலகெல்லாம் பரவும் என்ற கருத்தை மேற்கு நாட்டு ஆராய்ச்சியாளர் கள் தெரிவித்திருக்கிறார்கள்."

என புள்ளி விபரங்களை அடுக் கினார்.

அவர் குறிப்பிடும், உலகை யாளும் தகுதி பெற்ற அவர் யார் தெரியுமா?

உங்களுக்கு நிச்சயம் தெரியும்.

அவரேதான்!!!

▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼

## புரிந்ததும் புரியாததும்

இந்துத் திருமணங்களில் மண மகனை மணமகளுடன் சேர்ப்பதற்கு முன் பதாக, முதலில் சோமனிடமும் பின்னர் கந்தர்வனிடமும் அதன் பின்னர் அக் கினியிடமும் கையளித்து, அதன் பின்பு மணமகனிடம் ஒப்படைப்பதாக மந்திரங்கள் கூறுகின்றன. இதைப்பற்றி சிலர் தப்பான அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். இந்து சமயத்தில் உள்ள ஒவ்வொரு சடங்கும் அர்த்தங்களைக் குறிக்கின்றன. சில கருத் துக்களை மனத்தில் நிலை நிறுத்தச் செய் வதற்காக உருவாக்கப் பெற்றவையும் உண்டு .

இது பற்றிய விளங்கங்களை ஸ்மிருதிகளில் காணலாம். ஸ்மிருதிகளில காணப்படும் பொருளை அண்மைக்கால ஆராய்வாளர்கள் விரிவாகத் தந்திருக்கிறார் கள்.

"சோமன் சஸ்யாதிபதி.

பசுமைகளையும் வளர்ச்சியையும்

கொடுப்பவன். ஒரு பெண், இன்னொரு ஆணிடம் ஒப்படைக்கப்படுமுன்னர் அவளுக்குரிய உடல் வளர்ச்சிகளையும் மனவளர்ச்சிகளையும் பூர்த்தி செய்து தருமாறு சோமனிடம் பெண்ணானவள் ஒப்படைக்கப்படுகிறாள்.

கந்தர்வன் இனிமையான பேச்சைத் தருபவன்.

சோமனால் பூரணப்படுத்தப் பெற்ற பெண்ணிடம் அழகையும் நல்லகுரல் இனிமையையும் கந்தர்வன் அளிக்கிறான். கவர்ச்சிகரமான உடல்வாகை அளிக்கிறான்.

அப்புறம்,
பெண்
அக்கினியிடம்
கொடுக்கப்
படுகிறாள்.

அக்கினி பரிசுத்தப் படுத்துபவன். திருமணத்தின் முன்னர் பெண்ணிடம் இருந்த வேற்று ஆண்களின் நினைப்பை அகற்றுகிறான். உடலிலும் உள்ளத்திலும் எற்பட்ட அசுத்தங்களை நீக்குகிறான்.

இப்போது, உடலும் உள்ளமும் பரிசுத்தம் பெற்றவளாக, பெண்ணானவள் மணமகனிடம் ஒப்படைக்கப்படுகிறாள்.

இக்காரணங்களினால்தான் திருமணங்களைச் செய்யும் போது சடங்குகளுக்கும் முகூர்த்த நேரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது அவசியம். மேற்கண்ட தேவர்களோ நற்பேறுகளோ நல்லமுகூர்த்தத்தில் மட்டுமே பிரசன்னமாகின்றனவாம்.

## குழந்தைக்கு அமுது ஊட்டுதல்

இதை அன்னப்பிரசானம் என்று அழைப்பர். குழந்தை பிறந்து 6 மாதத்துக்கும் 12 மாதத்துக்கும் இடையில் அமுதூட்டலைச் செய்தல் வேண்டும். நான்கு மாதத்துக்கு முன்னர் அமுதூட்டல் செய்தலாகாது என இந்துசமய நூல்களில் விபரிக்கப் பெற்றுள்ளது. ஆண் குழந்தையாயின் இரண்டை விழுந்த மாதத்திலும் பெண் குழந்தையாயின் ஒற்றைப்பட்ட மாதத்திலும் அமுது ஊட்டல் சிறந்தது.

முதன் முதலாக ஊட்டும் அமுதில் பால் தயிர் நெய் கலந்திருக்க வேண்டும் எனச் சில முற்கால நூல்கள் தெரிவிக்கின்றன. மார்க்கண்டேய புராணத்தில், பாற்சோறும் தேனும் கலந்து கொடுப்பது சிறந்தது என கூறப்பெற்றுள்ளது.

இந்துக்களின் உணவு சைவ உணவாக இருந்த போதும், கிருஹ்ய சூத்திரத்தில் குழந்தைகளுக்கு ஆரம்ப உணவாக மாமிச உணவு கொடுத்தல் பற்றிக் கூறப்பெற்றுள்ளது. வேத காலத்தில் வாழ்ந்த சில இந்து இனங்கள் மாமிச போசனம் செய்தமையால் இது பற்றிக் கூறப்பட்டிருக்கலாம். ஆயினும், பிற்கால நூல்கள் சைவ உணவையே குறிப்பிடுகின்றன.

பொதுவாக தந்தையே அமு துாட்டலைச் செய்ய வேண்டும். அமுதை ஊட்டு முன்னர் குழந்தையின் சார்பாக சில வசனங்களை உச்சரிக்க வேண்டும்.

நல்லனவற்றைச் சுவைப்பேன் ஆகுக - நற்சுவாசம் பெறுவேன் ஆகுக - நல்வனவற்றையே காண்பேன் ஆகுக - நல்லனவற்றையே கேட்பேன் ஆகுக - நல்வாழ்வு பெறுவேன் ஆகுக.

பின்பு அமுது ஊட்டல் வழமை.




சுப்பையா புலவர் அந்தரத்தில் துயில்கிறார் ... எப்படி? மயாஜாலமாக இருக்கலாம் என்று பல மேலைத் தேசத்தவர்கள் ஆராய்ந்தும் பதில் கிடைக்கவில்லை. பல ஆண்டுகளின் முன்னர்.....

▼▼▼▼▼▼▼▼▼▼▼

### தந்திரம்

பஜனை ஒன்றில் எல்லாரும் பக்திப் பரவசமாகப் பாடிக் கொண்டிருந்தனர். மனதை உருக்கும்படி இருந்தது உண்மைதான். பஜனையில் இருந்தவர்கள் எல்லோரும் தமிழர்கள்தான். எவருக்கும் சமஸ்கிருதம் தெரியாது. வடமொழியில் உள்ள பஜனைப்பாடல்களைத் தமிழில் எழுதி வைத்துப் படித்தார்கள்.

வடமொழி மந்திர உச்சரிப்பில் சக்தி இருக்கிறது... எப்போது? அதைச் சரியான முறையில் அதற்குரிய முறையில் உச்சரிக்கும் போது. ஆனால் வடமொழியை தமிழ் எழுத்துக்களால் அப்படியே பிரதியிட முடியாது. வடமொழியில் உள்ள எழுத்துக்களின் சப்தங்கள் வித்தியாசமானவை.

தமிழில் வடமொழியை எழுதிப் படிப்பதனால் பலன் வந்துவிடும் எனப் பல இந்திய சஞ்சிகைகளில் எழுதுகிறார்கள். அவ்வாறானால் ....?

**எண் சோதிடர் :**
உங்களுடைய பெயரை 41க்கு மாற்றினால் நல்ல யோகம் வரும்.

**போனவர்:**
அப்படி என்றால் எனக்கு நாற்பத்தொன்று எனப் பெயர் வைக்க வேண்டுமோ?

**எண் சோதிடர்:**
ஆங்கிலத்தில் உங்களுடைய பெயரைக் கையெழுத்து வைக்கும்போது அந்த எழுத்துக்குரிய எண்களின் கூட்டுத் தொகை 41 ஆக வரவேண்டும்.

**போனவர்:**
எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியாதுங்க

**எண் சோதிடர் :**
ஆங்கிலம் தெரிஞ்சால் என்ன தெரியாட்டில் என்ன.. ஆங்கிலத்திலைதான் நீங்கள் கையெழுத்து வைக்கவேண்டும். அப்படி வைக்கப் பழகவேணும். அப்பதான் பலன் வேலை செய்யும்.

**போனவர் :**
அதென்னது ஆங்கிலத்துக்கு மட்டும் அந்தச் சிறப்பு. நான் நம்ப மாட்டன். இது தமிழுக்கு நீங்க செய்யிற துரோகம்.

அடுத்த இதழில் ...

**ஒலிபரப்புத்துறையில் இது புதிய சகாப்தமா?**

## கீதவாணி பற்றிய கருத்து

**சாமியார்களின் தொல்லை கனடாவிலும் வந்துவிட்டது போல் இருக்கிறதே?**
*(ஆ)சாமியார்கள் பற்றித்தானே கேட்கிறீர்கள்! ஏமாற்றுபவனின் புத்திசாலித்தனம் = ஏமாறுபவனின் முட்டாள்தனம். நாம் சாமியார்களிடம் மட்டும்தானா ஏமாறுகிறோம்!*

**கனடாவில் யார் சமயத்தை வளர்க்கிறார்கள்?**
*நம்புகிறவர்கள்!*

**கடவுள் இல்லை ... சமயம் தேவையில்லை என்று கனடாத் தமிழ்ப் பத்திரிகையில் வானொலியில் அடிக்கடி வருகிறதே.. பார்த்தீர்களா?**
*சீதையை நெருப்புக்கள் இறக்கியபடியால் தான் அந்தப் பெண்மையின் கற்பை உலகம் உணர்ந்தது. நாலுபேர் திட்டினால் தான் நம்பிக்கை அதிகரிக்கும். கண்ணை மூடிக்கொண்டு நம்புபவர்கள் கருத்தை உணர்ந்து நம்பும் காலம் வரும். (பேச்சு வழக்கில் சொன்னால் ... காகம் திட்டி மாடு சாகுமா?)*

**இந்துசமய வளர்ச்சியில் இங்குள்ள ஆலயங்களும், ஸ்தாபனங்களும், இந்துப் பெரியவர்களும் தொடர்பு சாதனங்களும் உரிய பங்காற்றுகின்றனவா?**
*எல்லோருமே நல்லவர்கள். சமயப் பற்று உடையவர்கள்.*

*ஆனால்.... ஒரு கதை*

*சில தொண்டர்கள் ஒரு கோவிலைச் சுற்றி மதில் எழுப்ப விரும்பினார்கள். அத்திவாரம் போட்டு இரண்டு வரி கல்லும் வைத்தாயிற்று. மறுநாள் கோவில் தொண்டர் ஒருவருக்கு சீமெந்துக் கலவையில் சந்தேகம் வந்தது. இரண்டு வரிசை கற்களையும் அகற்றிவிட்டு நல்ல கலவையில் இரண்டு வரிசை கட்டிவிட்டுப் போனார். மறுாள் இன்னொரு தொண்டருக்கு சந்தேகம். அவரும் மீண்டும் அந்தக் கற்களை அகற்றி விட்டு, தான் இரண்டுவரிசையை மீண்டும் கட்டிவிட்டார். இப்படியாக மாதக்கணக்கில் போனது.*
*மதில் இரண்டு வரிசை கல்லுக்கு மேல் எழும்பவில்லை.*

*இவர்கள் வேண்டாம் என்று ஒதுக்கிய கற்களைச் சேமித்து பக்கத்து வீட்டுக்காரர் ஒரு நாலுமாடி வீடுகட்டி முடித்தும் விட்டார்.*

*பாருங்கள் ... இந்தத் தொண்டர்கள் எல்லாரும் நல்ல எண்ணம் உடையவர்கள்தான். ஆனால் ஒருவர் மேல் ஒருவருக்கு நம்பிக்கையில்லை. co-operation, teamwork, mutual understanding, இல்லாவிடில் எதுவும் பயன் இல்லை.*

*இங்குள்ள ஆலயங்கள், ஸ்தாபனங்கள், வானொலிகள், பத்திரிகைகள், சமயப் பெரியவர்கள், தொண்டர்கள் ...இதை என்றாவது உணர்ந்தால் கனடா இந்துக்களுக்கு அது கிடைத்தற்கரிய பெரும்பேறு. !!!*

# கேள்வி பதில்

# அக்கினிப் பிரவேசம்

கண்ணரசன்

**சாதிமுறை போன்ற மனிதாபிமானம் அற்ற பாகுபாட்டுக்கு சைவசமயம்தான் காரணமா?**
*நந்தனார், திருக்குறிப்புத் தொண்டர் போன்று எத்தனையோ பேரை மற்றவருடன் சரிசமனாகக் கருதிய சைவ சமயத்தையா குறிப்பிட்டீர்கள். உலகத்தில் உள்ள அத்தனை உயிர்களும் சமன் என்று கூறிய இந்து வேதத்தின் பொருள் உணராத சில இந்துக்களின் சுயநலம்தான் சாதிமுறைக்குக் காரணம். சாதி முறை வேறு வருணாச்சிரம தர்மம் வேறு.*

**கடவுள் ஆணா பெண்ணா?**
*ஆண் பெண் என்ற பாகுபாடு எல்லாவற்றையும் கடந்து ஆணும் பெண்ணும் பேதமற்றவை என உணர வைத்து ஆணாகியும் பெண்ணாகியும் நின்ற அர்த்தநாரீஸ்வரன்.*

**சமூகத்துக்கள் மூடநம்பிக்கையைக் கொண்டுவந்தது இந்துசமயம் என்பது உண்மையா?**
*இந்துசமயத்துக்குள் மூடநம்பிக்கையைக் கொண்டுவர எத்தனிப்பது சமூகம் என்பதே உண்மை.*

**கனடாவில் அதிகம் கோவில் உருவாகுவது எதைக் காட்டுகிறது?**
*பொருளாதார மேம்பாட்டை ...! ஆரம்பத்தில் இந்துக்களின் நலனுக்கான ஒரு பெரிய கோவில் உருவானது. சனத்தொகை கூட இடநெருக்கடியும் போக்குவரத்துக் குறித்தும் மேலும் ஒரு சில ஆலயங்கள் உருவாகின. அந்தக் காரணத்தையும் எற்றுக் கொள்ளலாம். பின்னர் பல இடங்களில் தமிழர் பரவி இருந்ததால் இன்னும் சில உருவாகின. அந்தக் காரணத்திலும் நியாயம் இருப்பதுபோல் தென்பட்டது. ஆனால் இப்போது ....? காரணத்துக்கா பஞ்சம்!.*
*மூலகாரணம் ஒன்றேதான். இந்துக்களின் அஜாக்கிரதை!*

## என்னதான் நடக்கும் நடக்கட்டுமே

***பேச்சாளர் :***
இங்கே கோவில் என்ற பேரில் சம்பாதிக்கிறார்கள். எவ்வளவோ கஸ்டப்பட்டு உழைத்த பணத்தை மக்கள் கோவிலுக்குக் கொடுத்து ஏமாறுகிறார்கள். இந்த ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு இந்துக்கள் இடம் கொடுக்கக் கூடாது.
***மனைவி:***
என்னங்க இப்படிக் கூட்டத்திலை பேசிட்டு வாரீங்கள். இன்னும் கெதியிலை நீங்களும் கோவில் தொடங்கப் போறீங்கள். சனம் திட்டுமில்லை.
***பேச்சாளர் :***
ம் .. போடி பைத்தியக்காரி..
***மனைவி:***
ஏனுங்க சிரிக்கிறீங்க.
***பேச்சாளர்:***
எத்தனை பொய்களை அவிட்டு விடுறம். சனத்திலை முக்காவாசி நம்புது. இந்தச் சனத்தை ஏமாத்திறது றொம்ப லேசு!
***மனைவி:***
சும்மா சொல்லக்கூடாதுங்க .. நீங்க எல்லாரையும் வெண்டவர்.
**சனம் :**
????????????????????

உ
சிவமயம்

# பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ பிச்சைக் குருக்கள் அவர்களை இந்தியா மத்திய அரசு கௌரவித்தது



தமிழ்நாடு பிள்ளையார்பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பிரதம குருவும், கற்பக விநாயகர் வேதாகம வித்யாலய ஸ்தாபகரும், அதிபரும், உலகின் பலபாகங்களிலும் கும்பாபிஷேக விழாக்களைநடாத்தி வருபவரும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கி சிறந்த குருமாராக ஆக்கித்தந்தவரும் ,கனடா ரொறொன்ரோ ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் இந்து ஆலய 33 ஹோமகுண்ட உத்தமயாக மஹா கும்பாபிஷேக விழாவின் சர்வசாதகருமாகிய வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ பிச்சை குருக்கள் அவர்களை இந்திய மத்திய அரசு கடந்த மாதம் அவர்களுடைய தன்னலங்கருதா சேவையை பாராட்டி விருது வழங்கி கௌரவித்தது. மேற்படி பிச்சைக் குருக்களால் நடத்தபட்டுவரும் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வேதாகம வித்யாலயத்தில் வருடா வருடம் பன்னிரண்டு இலங்கை பிராமண மாணவர்களை குருமாராக படிப்பித்து உருவாக்கும் பணியில் ரொறொன்ரோ ஸ்ரீ துர்கா இந்து ஆலய பிரதமரும், அறங்காவலருமான சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள் கணேஷ் சுவாமிகளின் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. அதற்கான மாணவர்கள் இலங்கையிலிருந்து ஆலய செலவில் தமிழ்நாட்டிற்குஅழைத்து, சிவஸ்ரீ பிச்சைகுருக்களை தலைமையாசிரியராக கொண்ட பாடசாலையில் சேர்க்கபட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# அர்த்தங்கள்

## ம்பவங்கள்

**பத்திரிகையாளர் எஸ்.ஜெகதீசன் சொன்னது!**

73-74ம் ஆண்டு காலம். அப்போது யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் இருந்தேன். தேங்காய் சித்தர் திருநாவுக்கரசு பற்றி யாழ்ப்பாணம் எங்கும் தெரிந்த காலம். தும்புடன் (பொச்சு) இருந்த தேங்காய்களையே தலையில் அடித்து உடைத்து விடும் இவரது சித்துக்கள் பற்றி எங்கும் பேசிக் கொண்டனர். தினமும் ஆயிரக்கணக்கான தேங்காய்களை அப்படி அவர் உடைப்பதை காண்பதற்காக பலரும் செல்வர். அது மட்டும் அன்றி, பலரின் நினைத்த காரியங்களைப் பற்றிக்கூட இவர் சொல்லியிருக்கிறார்.

### யாழ்ப்பாணத்தில்

பணவருவாயை எதிர்பாராமல் இந்தச் சேவையைச் செய்து வருவது விந்தையாக இருந்தது. எப்படியாவது இவரின் சித்துக்கள் பற்றி பேட்டி எடுக்க வேண்டும் என்று அவரிடம் சென்றிருந்தேன். ஒரே கூட்டம். வரிசையில்தான் செல்ல வேண்டி இருந்தது. அவர் தனக்குத் தரப்பட்ட தேங்காய்களை உடைத்துப் போடும் அற்புதத்தை அங்கே கண்டேன்.

வரிசையில் எனக்கு முன்னே சரோஜினி என்ற பெண் நின்றார். அந்தப் பெண்ணின் தருணம் வந்தபோது, அப் பெண்ணை அழைத்து நினைத்த காரியம் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.. முன்னதாக, அந்தத் தேங்காயைத் தலையில் அடித்தார். தேங்காய் உடையவில்லை. நழுவி ஓடியது. மீண்டும் தேங்காயை அடித்தார் நழுவி ஓடியது. மீண்டும் முயற்சித்தபோது தேங்காய் உடைந்தது. ஆனால் அது அழுகியதாக இருந்தது.

"நான் நினைத்த காரியம் நடக்குமா?" என்று அந்தப் பெண் திரும்பக் கேட்டார். தயக்கம் இன்றியே, "மீண்டும் வந்தால் சொல்வேன்" என்றார்.

அடுத்ததாகச் சென்ற நான் அவரிடம் பத்திரிகைக்காக சில கேள்விகள் கேட்டுவிட்டு வந்தேன்.

ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தில் வந்து என்னுடைய பேட்டியை எழுதிக் கொண்டிருந்த போது அவசரமாக ஒரு செய்தி வந்தது.

"கரவெட்டியைச் சேர்ந்த சரோஜினி என்ற பெண் யாழ்ப்பாணத்திலிருந்து வீடு திருப்பிக் கொண்டிருக்கும் போது விபத்தொன்றில் மரணம்"

அந்தச் சித்தர் சொன்ன வார்த்தையை மீண்டும் நினைத்துப் பார்த்தேன். "மீண்டும் வரச்சொன்னாரா?" அல்லது "மீண்டு வரச் சொன்னாரா?" . நினைத்தால் இப்போதுகூட உடம்பெல்லாம் புல்லரிக்கிறது.

**எழுத்தாளர் அருண் கூறியது**

என்னுடைய 14 வயது நடக்கும்போது ஒரு அதிசயம். எமது தூரத்து உறவினர் ஒருவர் புத்தளத்தைச் சேர்ந்தவர். அவர் எமது வீட்டுக்கு வந்திருந்தார். அவர் பிறப்பினால் ஒரு கிறிஸ்தவர். ஆயினும் இந்துசமய நம்பிக்கை உடையவர். எமது வீட்டிலே தங்கியிருந்தபோது ஏதோ சிந்தித்தபடி எம்மிடம் ஒரு விடயத்தைச் சொன்னார். "யாரோ செய்வினை செய்து வைத்திருக்கிறார்கள். அதை எடுத்துவிடுவது நல்லது" என்றார். அதைத் தானே எடுக்க உதவி செய்வதாகக் கூறினார். சிறிது நேரம் நிஷ்டையில் அமர்ந்தார். அம்மனைக் குறித்துப் பல மந்திரங்களைச் சொன்னார். "இதோ.. இந்த இடத்தில் இருக்கிறது" என்று குறிப்பைச் சொன்னார். அந்த இடத்திலே சீமெந்துத்தரைதான் இருந்தது. சீமெந்தை உடைத்துக் கிண்டினோம். மிகவும் ஆழமான இடத்திலே செய்வினை செய்த பொருட்கள் உக்கிய நிலையில் காணப்பட்டது. இது எங்களுக்குப் பெரும் அதிசயமாக இருந்தது. இவரே தாழ்த்து வைத்துவிட்டுச் சொல்கிறாரோ என்ற சந்தேகம் தட்டியது. ஆனால் சீமெந்துத் தரையை உடைத்து இவ்வளவு ஆழமாக நாங்கள் வீட்டில் இருக்கக் கூடியதாக இவரால் வைத்திருக்க முடியாது. இது பற்றி அவரிடமே விளக்கம் கேட்டோம். வீடு கட்ட முன்னரே மேஸ்திரியின் உதவியுடன் செய்வினையை யாரோ வைத்திருப்பதாகச் சொன்னார். அவர் எம்முடன் தங்

### அரியாலையில்

கியிருந்த இக்காலத்தில், எமது மாமனார் ஒருவரின் வேலையில் திடிரென சஸ்பென்சன் ஓடர் வந்தது. அவரின் பொறுப்பில் இருந்த முக்கியமான பைல் ஒன்று காணாமல் போனதால் வேலையில் இருந்து இடைநிறுத்திவிட்டார்கள். அந்த பைல் எங்கே போனது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அதைக் கண்டுபிடிக்க ஏதாவது வழி உண்டா என எம்முடன் தங்கியிருந்தவரை வந்து கேட்டார்.

"சுலபமாகவே கண்டுபிடித்துவிடலாம்" என்றார். அலுவலகத்தில் வேலை செய்யும், அடிக்கடி வந்து போகும் எல்லோருடைய பெயரையும் எழுதித் தரச் சொன்னார். அந்தப் பெயர்களை துண்டுகளில் எழுதி உருட்டி கையில் வைத்திருந்தார்.

இரண்டு வாழைத் தடல்களை எடுத்துவரச் சொல்லி இருவரை நிறுத்தி அவர்களின் இடுப்பில் இந்த வாழைத் தடல்களை சாமாந்தரமாக

# என்றும் அதிசயம்!

வைத்தார். தடல்களின் இடையில் துண்டுகளை உருட்டி வைத்திருந்த கையை விரித்துப் பிடித்தார். எதுவும் நிகழவில்லை. அந்தத் தடலை இடுப்பில் பிடித்து வந்திருந்த சிறுவன் ராட்சத கணம் என்பதால் சரிவரவில்லை என்று கூறி அருகில் நின்ற என்னை அழைத்து தடலை இடுப்பில் வைத்தார். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. வாழைத்தடல் விரிந்தது. என்ன அதிசயம்...அவர் கையில் இருந்த ஒரு துண்டைக் கவ்விப் பிடித்தது.

அம்மனின் பெயர்களை உச்சரித்துக் கொண்டிருந்த அவர் அந்தத் துண்டைப் படித்து அந்த நபர்தான் பைல் எடுத்தவர் என்றும், இரண்டு நாட்களின் பின் 'இன்ன நேரம்' திருப்பி வைப்பார் என்றும் சொன்னார்.

அவர் கூறியதுபோலவே, அந்த நேரத்திலே பைலை அவர் திருப்பி வைப்பதை ஒளிந்து நின்று பார்த்ததாக எம் உறவினர் கூறினார். அவருடைய வேலை இடைநீக்கல் இரத்துச் செய்யப்பட்டது.

**பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு பெண்மணி கூறியது**

எனக்குத் திருமணப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. இது நடந்தது இரண்டு வருடங்களின் முன்னர். எத்தனையோ இடங்களில் இருந்து சம்பந்தங்கள் வந்தன. ஏழில் செவ்வாய் குற்றம் இருப்பதனால் அநேக பொருத்தங்கள் சரியாக அமையவில்லை. பொருத்தங்கள் சரியாக அமைந்து வந்தால் ஏதாவது ஒரு பிரச்சனையில் திருமணப்பேச்சு இடை நின்றுவிடும். இப்படியாக கலியாணப் பேச்சுக்கள் நான்கு வருடம் அளவில் இழுபட்டது. திருமணம் தடைப்படுவதற்குக் காரணம் நான் சற்று நிறம் குறைவாக இருப்பதனால் என்று எனக்குத் தெரியும்.

எனது வயதில் உள்ள அநேக பெண்கள் திருமணம் முடித்து குழந்தைகளும் பெற்றுவிட்டனர். சிலவேளை என்விதியை நினைத்து தனியாக இருக்கும் போது அழுது கொள்வேன். இனி மேல் எனக்குத் திருமணம் இல்லையா என்றும் நினைத்திருப்பேன். விரக்தியாகக் கூட இருக்கும்.

அப்போது ஒருநாள், சோதிடர் ஒருவரிடம் எனது சாதகத்தைக் கேட்கச் சென்ற சமயம் அவர் ஒரு உபாயம் கூறினார். இங்கே உள்ள துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஏழு கிழமைகள் செவ்வாய் தினங்களில் விரதம் இருந்து வருமாறு சொன்னார். அப்பாவுக்கு இது போன்றவைகளில் பெரிய நம்பிக்கை இல்லை. ஆனால் விரதம் இருந்து பார்ப்பதில் ஒன்றும் குறையப் போவதில்லை என்று கூறி, முழுமனத்துடன் அம்மனைச் சரணடைந்து நான் விரதம் இருந்தேன். நானே பஸ்சில் ஆலயம் சென்று வந்தேன். ஐந்து வாரத்துக்குள் ஒரு திருமணப்பேச்சு வந்தது.

சாதகமும் பொருந்தி வந்தது. என்னை அதே கோவிலில் வைத்துத் தான் பெண் பார்த்தார்கள். மறுநாளே திருமணம் முற்றாகியது. அதுவும் எதிர் பார்த்ததைவிட நல்ல மாப்பிளை என்பதனால் எனது பெற்றோருக்கும் மிக மகிழ்ச்சி. எனது தகப்பனார் ஏதோ காரணத்தினால் அந்தக் கோவிலுக்குப் போவதில்லை. இந்தச் சம்பவத்தின் பின்னர் அவருக்கும் கடவுளிடத்தில் உண்மையான நம்பிக்கை ஏற்படத் தொடங்கியது.

முழுமனத்துடன் அம்மனை வணங்கினால் அருள் கிடைக்கும். அது என் அனுபவம்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும்
ஆண்டவனின் அற்புதங்கள் நிகழ்ந்து
கொண்டிருக்கின்றன.
அவற்றை அறிந்து கொள்பவர்
சிலர்தான்.

'இதெல்லாம் காகம் இருக்கப் பனம்
பழம் விழுந்த கதை' என்று
சொல்பவர்களும் உள்ளனர்.

சிலருக்கு மட்டும் நடந்ததாயின்
அவ்வாறு சிந்திப்பதில் தவறு
கூறமுடியாது. எத்தனையோ பேருக்கு
எத்தனையோ இடங்களில் நடக்கும்
போது அதன் அடிப்படை பற்றியாவது
சிந்திக்க வேண்டும் அல்லவா!

உதாரணம் ...
அதி வேகமாகக் கார் ஓட்டியதால்
விபத்து வந்தது என ஒருவர் கூறுகிறார்.
'வேகமாகக் கார் ஓட்டிய எத்தனையோ
பேருக்கு விபத்து வரவில்லையே.
எத்தனையோ விபத்து வேகமாக கார்
ஓட்டாமல் இருந்தபோது
ஏற்பட்டிருக்கிறதே . ஆகவே வேகமாகக்
கார் ஓட்டுவதால் விபத்து வருகிறது
என்று கூறுவது .... காகம் இருக்கப்
பனம்பழம் விழுந்த கதை ...,

அப்படியாகக் கூறுவது எவ்வளவு
அறியாமையோ.

அதுபோல ....


## என்றோ ஒருநாள் தமிழன் ....

**(இன்றைய தலைமுறையின் பாணியில் எம் கலாச்சாரத்தினை எடுத்துவரும் கலப்பு இலக்கியம்)**

அடுத்த இதழில்

### பிறேம் என்பவர் கூறியது

எனது நண்பனுக்குத் திருமண மாகியும் பல வருடம் குழந்தை பிறக்க வில்லை. டாக்டர்களும் பல விதமான சோதனைகளைச் செய்தனர். இரண்டு முறை உருவாகிய குழந்தையும் கருச் சிதைவு ஆகிவிட்டது.

இந்த மனவேதனையைத் தீர்க் க அவர்களிடம் வழி எதுவும் இல்லை. கணவன் மனைவி இருவரிலும் பாரிய குறைகள் எதுவும் இருக்கவும் இல்லை. கந்த சஷ்டி விரதத்தின் மகிமையைச் சிலர் சொல்லக் கேட்டு 6 நாட்களும் கடுமையாக நோன்பிருந்தனர். அதற் காக அந்த வாரம் முழுதும் வேலைத் தலத்தில் லீவு எடுத்து இருவரும் தினமும் காலை மாலை இரு நேரமும் றிச்மன்ட்ஹில் கணேசா ஆலயம் சென் று வணங்கி நோன்பு இருந்தனர்.

விரதம் முடிந்து ஓரிருவாரங் களில் பிள்ளை தங்கியது. பத்து மாதங்களில் எந்தவித கஸ்டமும் இல் லாமல் குழந்தை பிறந்தது.

அடுத்த வருடமும் கந்தசஷ்டி அனுஷ்டித்து இரண்டு மாதக் குழந் தையுடன் "சூரசம்ஹார கந்தப் பெருமானை" அந்த நெரிசலுக்குள் அவர்கள் தரிசித்ததைக் கண்டபோது, ஆண்டவனின் பெருங்கருணை வியக்க வைத்தது.

அப்பழுக்கற்ற நம்பிக்கைதான் அடித்தளம்.

## தொடராக எதிர்பாருங்கள்

## தீவுப்பகுதித் திருத்தலங்கள்

ஈழத்தின் சப்ததீவுகளிலும் எழுந்தருளியிருக்கும் இறைவனின் அற்புதங்கள்

## சோதிடம் ஒரு சந்தேகம்:

இரண்டு பேருக்கு ஒரே ஜாதகம் இருந் தால், இருவருக்கும் ஒரே பலனா?

இருவருக்கு ஒரே சாதகம் அமையாது.

இரட்டைப் பிள்ளைகளுக்கு?

அவர்களுக்கும் ஒரே ஜாதகம் அமையாது.

எத்தனையோ இரட்டைப் பிள்ளைகளுக்கு கிரகநிலை, நவாம்சம் எல்லாம் ஒன் றாய் இருக்கிறதே?

அது ஜாதகக் குறிப்பு. ஜாதகம் அல்ல. அப்படி என்றால்...

ஒரே நேரத்தில் வெவ்வேறு இடத்தில் பிறந் தவர்களுக்கு ஒரே ஜாதகமாய் அமையாது. ஒரே கணத்தில் ஒரே இடத்தில் பிறந்தால் மட்டுமே ஒரே ஜாதகம் அமையும்.

அப்படி ஒரே கணத்தில் பிறந்த பிள் ளைகளுக்கு ஒரே பலன் அமையுமா?

அப்படி ஒரே இடத்தில் ஒரே கணத்தில் இ ருவர் பிறக்க முடியாது என்பது படைப்பின் விதி.

மருத்துவரீதியில் அப்படி இருவரைப் பிறப் பித்தால் ....

பிறப்பித்தாலும் இவ்விரு குழந்தைகளும் முதற்சுவாசம் செய்யும் நேரத்தை விஞ் ஞானம் கட்டுப்படுத்த முடியாது. சோதிடத் தின்படி ஏறத்தாள இரண்டு மணித்தியாலத் தில் இலக்கினம் மாறும். 13 நிமிடத்தில் நவாம்சம் மாறும். இரண்டு நிமிடத்தில் சஷ்டியாம்சம் மாறும். 6 செக்கனில்நாடி அம்சம் மாறும். இந்த 6 செக்கன் இடை வெளியில் இரண்டு குழந்தைகளை ஒரே இடத்தில் பிறப்பித்தாலும் அவை ஒரே நேரத்தில் முதற்சுவாசம் செய்யாது என்பது சோதிடவிதி. அத்தோடு செயற் கையாகப் பிறக்கும் குழந்தைகளின் சோதிட ரீதியான நேரத்தை நிச்சயம் செய் ய வழிமுறைகள் உண்டு. இதை லக்கின நிச்சயம் என்பர்.

கிரகநிலை நவாம்சத்தை வைத்துத்தானே. சோதிடம் சொல்கிறார்கள். அப்படியாயின் அவர்கள் சொல்வது பிழையா?

உதாரணமாக, மொன்றியாலில் இருந்து ஒருவர் ரொறன்ரோவில் உள்ள ஸ்ரீ துர்க் கா இந்து ஆலயத்துக்கு வரவேண்டி இருக் கிறது என்ற வைத்துக் கொள்வோம். ஒன் ராரியோவுக்கான Map ஐ வைத்துக் கொண்டு வாகன மூலம் வந்து கொண் டிருக்கிறார். றொன்ரோவுக்கு வந்ததும், carnfoth road எங்கே என்று Map ல் பார்த் தால் அதைக் காணவில்லை. ரொறன் ரோவுக்கான Map ஐ வாங்கிப் பார்த்து அங்கே carnforth roadக் கண்டுகொண்டார். ஒன்ராரியோ Mapல் carnforth road இல்லை என்பதற்காக அது பிழையான மைப் என்று சொல்லவும் முடியாது. carforth road என்று எதுவும் கிடையாது என்றும் கூறமுடியாது.

எந்த அளவு நுட்பம் தேவை என் பதே எந்த map என்பதை நிர்ணயிக்கிறது. அது போல, கிரநிலை கொண்டு அறியும் விடயங்களில் உள்ள மிகநுட்பங்களை நாடி அம்சத்தினால் மட்டும் அறியலாம்.

### Mathematics பொய்க்குமா?

உலக சனத் தொகை கூடிக் கொண்டு வருகிறது. கடந்த காலத்தில் உள்ள சனத் தொகையை வைத்து சில கணித வல்லுனர் கள் சனத் தொகை மாற்றத்துக்கு சமன் பாடுகள் போட்டு வைத்திருக்கின்றனர். அதில் அதிசயம் என்ன வென்றால் அவர் கள் பலரின் கணக்கின்படியும் இன்னும் 40 வருடத்துக்குள் சனத் தொகையின் அளவு எண்ண முடியாத அளவுக்கு வந்துவிடும். அது எப்படி??.

கனடா இந்து பப்ளிகேசன்ஸ் ஸ் தாபனத்தினால் உருவாக்கப் பெற்று ஸ்ரீதுர்க் கா இந்து ஆலயத்தினால் வெளியிடப்பெறும் “கனடா இந்து” என்னும் இப்பத்திரிகையில் வெளிவரும் ஆக்கங்களிலும் விளம்பரங் களிலும் உள்ள உள்ளடக்கங்களுக்கு கட் டுரையாளர்களும் விளம்பரதாரருமே பொறுப் பாளராகும்.

ஆக்கங்களை எமது முன் னனுமதியுடன் பிரசுரிக்கலாம்.

வாசகர்களினது விமர்சனங்களும், கருத்துக்களும் எம்மைச் சரியான பாதையில் எடுத்துச் செல்லும். எமக்கு அனுப்பி வைக் கப்பெறும் ஆக்கங்கள் காலக்கிரமத்தில் தரமறிந்து பிரசுரமாகும். ஆக்கங்கள் இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு அல்லது இந்துக் களின் வளர்ச்சிக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ உறுதுணையாக இருக்க வேண்டும்.

- கனடா இந்து பப்ளிகேசனஸ்

### உன்னைப் புரிந்து கொள்ள உபாயம்!

மனிதா,
பாதையால் நடந்து செல்லும்
போது ஒரு முறை பார்!

உன்னையேதான் கேட்டுக்கொள்
அதோ.. செல்லும் மிருகத்துக்
கும் உனக்கும் எது பொது?

அந்த நல்லவனுக்கும் உனக்
கும் எது பொது?

இப்போது உனக்குப் புரிந்திருக்கும்

- சுபசீதாவளியில் இருந்து

றொறன்ரோ ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம்
தமிழ்ப் பகுதிகளில் உள்ள பிராமண மாணவர்கள்

# கல்வி கற்க உதவி

மதகுருவாக இருப்பதற்கு பலவிதமான கல்வி நெறிகளில் அறிவு பெற்று இருக்க வேண்டும். சமஸ்கிருதம், சோதிடம், சிற்பம், கோவில் அமைப்பு, சிட்சை, வியாகரணம் போன்றவற்றில் கட்டாயம் பரீட்சயமும் விளக்கமும் இருக்க வேண்டும். இந்தத் துறைகளில் சிறப்பான அறிவு இருந்தால்தான் ஆகமப் பிரகாரம் இந்துசமயத்தினை வழிநடத்தும் திறன் ஏற்படும்.

இலங்கையில் உள்ள இளம் பிராமண மாணவர்கள் நாட்டில் உள்ள சூழ்நிலை காரணமாக பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். சமயம் சரியான முறையில் வளரவேண்டுமானால் மதகுருக்கள் கற்றறிவு உள்ளவர்களாக உருவாக வேண்டும். இதன் காரணமாக கம்பியூட்டர், ஆங்கிலம் போன்றவற்றையும் இந்த மாணவர்கள் கற்ற எற்பாடு செய்ய இருப்பதாக றொறன்ரோ ஸ்ரீ துர்க்கா இந்து ஆலய அறங்காவலர் சபைத்தலைவரும், ஆலய பிரதம குருக்களுமான சிவஸ்ரீ தியாகராஜாக்குருக்கள் கணேஷ்சுவாமிகள் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் தனது குருநாதரான பிட்சைக் குருக்கள் அவர்கள் நடாத்தும் வேத பாடசாலையில் 12 மாணவர்கள் வேதம் கற்க வசதி ஏற்பட இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப் பெற்றிருப்பதாகவும் எம்மிடம் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள மாணவர்களுக்காக இந்தப் பணியை ஆரம்பிக்க இருக்கிறார். இதற்கான விண்ணப்படிவம் இலங்கையில் உள்ள சில தேவஸ்தானங்களுக்கு அனுப்பிவைக்கப்பெற்றுள்ளது.

மேலும், தியாராஜாக்குருக்கள் கணேஷ்சுவாமிகள் தெரிவித்ததாவது,

"உலகெங்கும் இந்துசமயம் நிலைக்கும்படியான பல பணிகளில் றொறன்ரோ ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம் ஈடுபட இருக்கிறது. றொறன்ரோவில் "ஸ்ரீ துர்க்கா இந்து ஆலய போதனாகூடம்" ஒன்றினை ஆரம்பித்து சமய தமிழ்க் கல்விகளையும் ஆராய்வுகளையும் ஊக்கப் படுத்தும் முயற்சியில் ஆலயம் தற்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இந்த எண்ணம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஆலயம் ஆரம்பித்தபோது எமது இந்த நோக்கங்களை "உலகத்தமிழர்" பத்திரிகை வாயிலாக அறிவித்திருந்தேன். படிப் படியான முறையில் எமது சமயப்பணி நெறிப்படுத்தப் பெற்று நிறைவேறிவருகிறது. எல்லாம் அன்னையின் ஆசிகள்.

எமது இந்துசமய தமிழ்ப் போதனைகள், மற்றைய ஸ்தாபனங்களிருந்து வேறுபட்டது. object - oriented என்று கூறுவார்களே.. அந்தப்படி 'நோக்கம் சார்ந்த நெறிப்படுத்துகை'யாக போதனைகள் அமைய இருக்கிறது. ஆலய கும்பாபிஷேகப் பணிகளால் தாமதிக்கப்படும் எமது சமய வளர்ச்சிப் பணி, கும்பாபிஷேகம் முடிந்த பின்னர் துரிதம் அடையும்.

நீண்டகாலமாக தொடரப்படாமல் இருக்கும் தமிழ் இந்துக் கலைவடிவங்களுக்கு புத்துயிர்ப்புக் கொடுக்கும் பணிகளில் இந்துசமய ஸ்தாபனங்கள் ஈடுபடவேண்டும், அதற்கு முன்னோடியாக றொறன்ரோ ஸ்ரீ தூர்க்கா இந்து ஆலயம் திகழும்."

இவ்வாறாக ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயப் பிரதம குருக்கள் தெரிவித்தபோது, கனடாவில் இந்துசமயப் பணிகளுக்கு முன்னோடியாக இவர் திகழ்வார் என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டியது.

"போகிற போக்கில், கனேடிய இந்துக்கள் தேடும் சரியான தலைமைத்துவம் நீங்கள்தான் போல் இருக்கிறதே?" என்று கேட்டே விட்டேன்.

"சமய வளர்ச்சிக்கு தலைமைத்துவம் தேவையில்லை.. சமூகத்துவம்தான் தேவை" என்றார் தமாஷாக.

உ
ஓம் சக்தி

## றொறன்ரோ ஸ்ரீ துர்க்கா இந்து ஆலய பூசை நேரங்கள்

| | | |
|---|---|---|
| காலை | 8.00 - | திருவனந்தல் |
| காலை | 9.30 - | காலைப் பூசை |
| பகல் | 12.00 - | மத்யான பூசை |
| மாலை | 6:00 | சாயரட்சை பூசை |
| இரவு | 7:31 | இரண்டாங்கால பூசை |
| இரவு | 9.00 | அர்த்தசாம பூசை |

## மாறும் மரபுகள்

ஈழத்தில் உள்ள பல்வேறு இடங்களில் இந்து சமய மரபுகளில் வித்தியாசங்கள் உண்டு. சம்பிரதாயங்களில் வித்தியாசம் உண்டு. இந்து சம்பிரதாய வித்தியாசங்களுக்குக் காரணங்களும் உண்டு.

இது பற்றிய ஆராய்வினை றொறன்ரோ ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயத்தின் அனுசரனையுடன் செய்ய உத்தேசித்துள்ளோம்.

உங்கள் கருத்துக்களையும் ஆக்கங்களையும் எழுதி அனுப்புங்கள்.

"கனடா இந்து பப்பிளிகேசன்ஸ்"

ஆலயத்தில் பணிபுரிய வந்த

# சிற்பக் கலைஞர் எங்கே?

ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயத்தில் திருப்பணிகள் மிக மும்முரமாக நடந்து வருவது அறிந்ததே. சிற்பக் கலைகளைச் செய்வதற்காக இந்தியாவில் இருந்து தொழிலாளர்களை ஆலயம் sponsor செய்து வரவழைத்தது. ஒருவரை இங்கு வரவழைப்பதென்றால் மிகுந்த சிரமமான காரியம். ஆலயப்பணிக்கென வரவழைக்கப்பட்ட சரவணன் திடீரென தலைமறைவாகிவிட்டார்.

இதே போன்று கடந்த வருடம் ஆலயத்தில் பணிபுரிவதற்கென ஒரு குருக்களை இந்தியாவில் இருந்து ஆலயம் வரவழைத்தது. இந்தியாவில் உள்ள தேவஸ்தானம் இவர் ஆலயத்தில் பூஜை செய்வதற்கான கல்விகளும் அனுபவமும் உடையவர் என்று சான்றிதழ் கொடுத்திருந்தது. அந்தச் சான்றிதழை நம்பி வரவழைத்தபின்னர் இவர் மடப்பள்ளிக்கு பொறுப்பாக இருந்தவர் என்று தெரியவந்தது. அதன்பின்னரும் இங்கு ஆலயத்தில் பணிபுரிய அனுமதி அளிக்கப்பட்டது. இந்த ஐயரும் திடீரென ஆலயத்தில் இருந்து விலகியுள்ளார். இவரை இந்தியாவில் இருந்து தருவிக்க ஆலயத்தின் சிரமங்களையோ பணச் செலவையோகூட இவர் நினைத்துப் பார்க்கவில்லை.

இவரை இங்கே தற்சமயம் வேலைக்கு வைத்திருக்கும் ஸ்தாபனங்கள்கூட, இவர் ஏன் விலகினார் என்றோ, அவரை வரவரவழைக்க ஆலயம் கொண்ட சிரமங்களையோ அறிய முயற்சிக்காதது வருத்தத்துக்குரியது என பல இந்துக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இது பற்றி ஆலய பிரதமகுருக்களிடம் கேட்டபோது, இந்து சமயப் பணியில் இந்தக் குருக்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் அதுவே போதும். சரிபிழை கூற அன்னை ஸ்ரீ துர்க்கா தேவிக்கு தெரியும் என்றார்.

தியாகராஜாக்குருக்கள்

# கணேஷ்சுவாமிகளின்

## ஆலயப் பிரசங்கங்களில் இருந்து



### சிவராத்திரி பற்றி

சிவனுக்கு உகந்த ராத்திரி சிவராத்திரி. சிவராத்திரி விரதத்தின் மகிமைகள் பெருமைகள் சொல்லில் அடங்காது. சிவராத்திரி விரதத்தால் பேறுபெற்றவர் பலர்.

சரஸ்வதியும் இலக்குமியும் பிரமா விஷ்ணுகளைச் சேர இந்த விரதமே காரணமாகியது.

நஞ்சுண்ட சிவபெருமானைத் தேவரும் மூவரும் போற்றித் தொழுது பூஜித்த காலம் சிவராத்திரி என்பர்.

சிவனும் ஜோதியாய் எழுந்தருள, அவனது அடி முடிகளைத் தேடி விஷ்ணுவும் பிரம்மாவும் செல்ல தேவர்கள் பூஜித்த காலம் சிவராத்திரி என்றும் சொல்வர்.

ஒரு முறை தேவி விளையாட்டாக சிவனது கண்களை மூட உலகமே இருண்டுவிட்டது. தேவர்களும் முனிவர்களும் ஓடோடி வந்தனர். ஒளி தரவேண்டும் எனச் சிவனைப் பூஜித்த காலமும் சிவராத்திரிதான்.

நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, மஹாசிவராத்திரி என்று ஐந்துவகையாகச் சிவராத்திரிகளை அனுஷ்டிப்பர்.

நித்திய சிவராத்திரி என்றால் ஒவ்வொரு சதுர்த்தசி தினத்திலும் சிவனை வணங்குவது.

அபர பட்ச சதர்த்தசியில் சிவனைப் பூஜிப்பது பட்ச சிவராத்திரி.

ஒவ்வொரு மாதங்களிலும் குறித்த திதிகளில் சிவபூசை செய்வது மாத சிவராத்திரி.

சோமவாரமும் அமாசையும் சேர்ந்துவரும் நாளில் சிவனைப் பூஜிப்பது யோக சிவராத்திரி.

ஐந்துவகை சிவராத்திரியில் மாசிமாதம் அபரபட்ச சதுர்த்தசி இரவில் வரும் மஹாசிவராத்திரி மிக்க சிறப்படையது.

மஹாசிவராத்திரி தினத்தில் நான்கு ஜாமப் பூசைகளும் ஆலயத்தில் நிகழும். அன்று வீட்டிலாவது ஆலயத்திலாவது நித்திரை விழித்து சிவபூசை செய்ய வேண்டும்.

சிவராத்திரி தினத்தில் உபவாசம் இருக்க வேண்டும். உபவாசம் இருக்க முடியாதவர்கள் பால் பழம் உண்டு, முதல் சாமப் பூசையுடன் உபவாசத்தை முடித்துக் கொள்ளலாம்.

சிவராத்திரி அன்று இரவில் வரும் கடைசி 14 நாழிகை லிங்கோற்பவ காலமாகும். இந்த லிங்காற்பல காலத்தில் சிவபூசை செய்வது மிக்க பலனைத் தரும்.

இந்த விரதத்தின் பலன்கள் அப்பிறப்பிலேயே கிடைக்கும் என்று சில நூல்கள் கூறுகின்றன.

அசுவமேத யாகத்துக்கு ஈடாகவும், பிரமஹத்தி தோசம் நீங்கும் அளவில் இந்த விரதம் சிறப்புடையது.

சகல விரதங்களையும்விட மேன்மையாகச் சொல்லப்படும் இந்த நாளில் கடவுளை வணங்கிக் கருணை பெறுவீர்.

### விபூதி பற்றி

திருநீறு வாங்கும் போது இடது கையின் மேல் வலது கையை வைத்து உள்ளங்கையில் திருநீற்றைப் பெறவேண்டும். இந்தத் திருநீற்றை வேறு பக்கம் திரும்படி அணிய வேண்டும்.

வடக்கு திசை நோக்கி திருநீறு தரிப்பது உத்தமம்.

பெருவிரல், நடுவிரல், மோதிர விரல்களைக் கூட்டித் திருநீற்றை அணிய வேண்டும்.

வீட்டில், ஈர உடையுடனும் அல்லது ஆடையில்லாமலும் இருக்கும் போது திருநீற்றை அணியக்கூடாது.

திருநீற்றை அணியும் போது நிலத்தில் சிந்தாமல் பாதுகாக்க வேண்டும்.

வாயைத் திறந்து கொண்டும், தலையை அசைத்துக் கொண்டும், பிறருடன் பேசிக் கொண்டும், பராமுகம் செய்து கொண்டும், சிரித்துக் கொண்டும், தலையைக் கவிழ்ந்து கொண்டும், நடந்து கொண்டும், கண்ணாடி பார்த்துக் கொண்டும் திருநீறு தரிக்கக் கூடாது.

*சிலர் சுவாமிப்படங்களை வீட்டில் அழகுக்காக மாட்டுவார்கள். ஆனால் அந்தப் படங்கள் இருக்கும் முறையில் கவனம் செலுத்த வேண்டும். தெற்குப் பார்க்க படங்கள் வைப்பதைத் தவிர்க்கவும். பூசை இடத்தில் குழல் ஊதும் கண்ணனையும், நிற்கும் இலக்குமியையும் வைத்தல் ஆகாது.*

*அதே போல நடனமிடும் நடராஜரை வைத்திருக்கும் இடம் புனிதமாக இருக்க வேண்டும்.*

### குரு பற்றி ...

குரு என்றால் அஞ்ஞானத்தை நீக்கி ஒளியைக் கொடுப்பவர். குரு என்பவர் மனித ரூபத்தில் வந்த கடவுள். இதை வேதத்திலே,

"ஆசார்ய தேவோ பவ"

என்றும்

"தெய்வ மனுஷ ரூபேன"

என்றும் கூறியிருக்கிறது.

இலௌகீக வாழ்க்கையில் தெய்வம், பெற்றோர், குரு, தாரம் இந்த நான்கும் நல்லதாக அமைய வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள். தெய்வ அபராதம் செய்தவன் குருவிடம் தஞ்சம் அடைந்தால், அதற்கான பிராயச்சித்தங்களைச் செய்து குரு காப்பாற்றிவிடுவார். ஆனால் குருவுக்கு அபராதம் செய்தால் அவனை இறைவனாலும் காப்பாற்ற முடியாது என்கிறது இந்து சமயம்.

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று அருணகிரிநாதர் முருகன் குருவாக வந்து அருள்வதாகக் கூறுகிறார்.

மணிவாசகர் எப்படிச் சொல்கிறார் தெரியுமா?

"குருமணிதன் தாள் வாழ்க" என்கிறார்.

திருமந்திரத்திலே, "குருவே சிவம் எனக் கூறினான் நந்தி" என்று குருவின் பெருமையைக் காணலாம்.

# GENERAL
## TOURS & TRAVELS

மிகக் குறைந்த விலையில்
இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய
நாடுகளுக்கு பிரயாணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்!

GT



**LOWEST AIR FARE TO
COLOMBO, SINGAPORE,
INDIA & OTHER DESTINATIONS**

IATA

*2163 Lawrence Ave. East
Unit D, Scarborough, ON
Tel: (416) 755-8500
Fax: (416) 755-5552*

# சந்தேக நிவர்த்தி

**வீட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட எள் எண்ணெய்ச்சட்டிகளை ஆலயத்தில் எரிக்க அனுமதி மறுக்கப்படுகிறது. பக்தர்களின் இந்த விருப்பத்தை ஏன் ஆலயம் உதாசீனம் செய்கிறது?**

இலங்கை இந்தியாவில் வீட்டில் இருந்துதான் எள் எண்ணெய்ச் சட்டிகளை ஆலயத்துக்கு எடுத்துச் செல்வார்கள். அதே போன்று கனடாவிலும் செய்ய பக்தர் விரும்புவதை நாம் அறிவோம். கனடாவில் சில சட்ட வரைமுறைகள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். குறிப்பிட்ட அளவுக்கு மேல் நெருப்பும் புகையும் அதிகமாக fire alarm இயங்கும். தீயணைப்புப் படையினர் வந்து ஆலயத்தில் உள்ள எண்ணெய் சட்டிகளை அணைப்பதை இந்துக்களாகிய நாம் விரும்பமாட்டோம். அளவான சட்டிக்குள் எண்ணெய் எள் போன்றவற்றை அளவாக வைத்து ஆலயத்திலே எள்ளெண்ணைச் சட்டிகளை வைத்திருக்கிறோம். அதில் எரிக்கும்போது நெருப்பும் புகையும் குறைவாக இருக்கும். இதனால் எமது அனுஷ்டானத்தில் fire alarm னால் அசௌகரியம் ஏற்படாவண்ணம் பாதுகாக்கிறோம்.

அத்துடன் நெருப்பு புகை போன்றவற்றால் சுகாதாரம், பாதுகாப்புக்களை உறுதிப்படுத்த அரச அங்கீகாரம் பெற்ற சாதனங்களை ஆலயத்தில் நிர்மாணம் செய்யவும் பரிபாலனம் செய்யவும் உள்ள செலவை ஈடுசெய்ய 5 டொலர் திருப்பணி நிதியாக வைத்திருக்கிறோம். இது ஆலயத்தில் உள்ள நடைமுறை. நல்ல நோக்கத்துடனான இவ்வாறான நடைமுறையைப் புறக்கணிப்பதும் குற்றம் சொல்லவதும் முறையாகாது.

**ஆலயத்துக்குள் கமராவோ வீடியோவோ எடுப்பதைத் தடை செய்துள்ளீர்கள். ஆலயத்தில் நிகழ்ந்த சில திருமண வைபவத்தில் கூட அப்பாளை வீடியோவில் எடுத்தமைக்காக கட்டாயமாக அந்தக் காட்சியை நீக்கும்படி சொல்லியிருக்கிறீர்கள். இந்த விடயத்தில் மிகவும் பிடிவாதமாக இருப்பது பக்தர்களுக்கு அசௌகரியம் என்பதை நீங்கள் அறியவில்லையா?**

பல தேவஸ்தானங்கள் ஆலயத்துக்குள் படம் எடுப்பதை அனுமதிப்பதில்லை. இவ்வாறு படம் எடுப்பது கர்ப்பக்கிரகத்தில் உள்ள சக்தியைக் குறைக்கும் என்று சிலர் கருதுகிறார்கள். ஆலயத்தில் அம்மனை வீடியோ எடுக்க அனுமதிக்காமைக்கு இன்னொரு காரணம் இருக்கிறது. திருமண வைபத்தில் அம்மனை வீடியோவில் எடுத்து, நாலைந்து உருவம் போல ஆக்கி ... நிறங்கள் போட்டு ... சுழல்வது போல செய்து ... இப்படியாக எல்லாம் எடுத்த வீடியோவை டீவியில் போடும் போது, முன்னால் மதுபானத்தையும் இறைச்சி வகைகளையும் வைத்துக் கொண்டு, காலை நீட்டிக் கொண்டு ..... , இப்படியாக தெய்வ இழுக்குச் செய்வதை ஊக்குவித்தல் கூடாது என்பது எமது ஆலயத்தின் எண்ணம்.

**ஆலயப்பணி செய்வதற்கு குருக்களையும் மற்றப் பணியாளர்களையும் இந்தியாவில் இருந்து அழைத்திருக்கிறீர்கள். ஏன் இலங்கையில் இருந்து அழைப்பதற்கு நீங்கள் முயற்சி செய்யவில்லை?**

இந்து சமயம் என்று கூறும்போது இலங்கை இந்தியா

## ஸ்ரீ துர்க்கா இந்து ஆலய பிரதம குருக்கள்

என்ற பேதம் எம்மிடம் இல்லை. இந்தியாவில் இருந்து ஆலயம் தருவித்த குருக்களே, ஆலயத்தைவிட்டு ஓடிவிட்டார் என்றால் இலங்கையில் இருந்து வரவழைக்கப்படுபவர் விலகி அகதிநிலை கோருவதாக அமையும் சந்தர்ப்பம்தான் அதிகம்.

**சமயசஞ்சிகை ஒன்றை ஆலயத்துக்குள் விற்கும் போது நீங்கள் அனுமதிக்கவில்லை என அறிந்தேன். ஒரு சமய ஸ்தாபனம் இன்னொரு சமய ஸ்தாபனத்தின் சமயப் பணிக்கு ஒத்துழைக்கக் கூடாதா?**

ஆலயத்துக்குள், ஆலயத்துடன் சம்பந்தப்படாத எந்தப் பொருளையும் விநியோகிப்பதை நாம் அனுமதிப்பதில்லை. ஆலயத்துக்குள் வருபவர்கள் மனம் ஒன்றித்து வழிபாடு வரும்போது அல்லது திரும்பிச் செல்லும் போது அவர்கள் மனம் நிம்மதியாக இருக்க வேண்டும். விளம்பரங்களையோ புத்தகங்களேயோ விற்க ஒருவரை அனுமதித்து இன்னொருவரை அனுமதிக்காமல் விலத்த முடியாது. ஒருவரை நாம் அனுமதித்தால் எல்லோருமே அனுமதி கேட்பார்கள். இறுதியில் ஆலயம் வழிபடும் இடமாக அமையாமல் போய்விடும் என்பதால் எவரையும் அனுமதிப்பதில்லை.

**நீங்கள் இந்த ஆலயத்தை உங்கள் சொந்தப் பொருள் போன்று நினைத்து மற்றவர்களை நடத்துவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். உண்மையா?**

நான் அவ்வாறு நினைப்பதால் ஆலயம் தூய்மையாகவும் ஒழுங்கு முறைப்படி இருக்கவும், அடியார்களின் வழிபாடுகளுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கவும் என்னால் முடிந்ததைச் செய்கிறேன். எல்லோருமே எல்லாக் கோயில்களும் உங்களடையதாகவே கருதுங்கள். அப்போது சமய வழக்கங்களையும் வழிபாடுகளையும் தொண்டுகளையும் உங்களாலும் மனத்தூய்மையுடன் செய்ய முடியும். எம்முடைய இந்து சமயமும் தமிழர் நாகரீகமும் உலகம் மெச்சும்படி அமையும். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் மனப்பான்மை வளரும்.


இந்து மாணவர்கள் மத்தியில்
சமய நம்பிக்கை ஊட்டவும்,
சமயம் பற்றிய கருத்துக்களை
விளக்கவும்,
இந்து சமயத்தை அனுசரிப்பதில்
உள்ள பிரச்சனைகளை அறியவும்
அடுத்த இதழில் புதிய பகுதி ஒன்றை ஆரம்பிக்கிறோம்

(தமிழ், ஆங்கிலத்தில்)

**Hindu youth Forum**
**இந்து இளைஞர் அரங்கம்**

உங்கள் ஆக்கங்களை
எழுதி அனுப்புங்கள்

# தெளி தேன்

சுட்டு விரலால் குற்றம் சுமத்தும் போது, மற்றோரு விரல் ஏன் மார் பினைக் காட்டுகிறது?
சுயவிமர்சனம் செய்வதற்காக ......

## ஒரு புகார்

ஆலயம் ஒன்றில் ஒரு குற்றம் கூறப்பட்டது. கூறப்பட்ட புகார்

இதுதான்.

"திருவிழா ஒன்றைச் செய்வதாக நாம் பதிவு செய்து, அதற்கான பணத்தையும் கொடுத்திருந்தோம். திருவிழா நாளில் எமக்கு மட்டுமே தர்ப்பை போட்டு, அபிஷேகம் செய்யும் உரிமையுடன் சகல மரியாதையும் கிடைக்கும் என எதிர்பார்த் தோம். ஆனால் அன்றைய தினம் அபிஷேகம் செய்ய பலருக்கு அனுமதிக் கப்பட்டது. அதிக பணத்தைக் கொடுத் துத் திருவிழாச் செய்தும், எமக்குத் தகுந் த மரியாதை தரப்படவில்லை"

உண்மையில் இவர்களின் மன ஆதங்கம் புரிகிறது. இந்தப் புகாரைக் கூறியவரை நாம் சந்தித்தோம்.

நீங்கள் திருவிழாச் செய்யும் போது ஆலயத் தில் இருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

இவ்வளவு காசை நாங்கள் கொடுக்கும் போது, அந்தத் திருவிழாவினால் உள்ள பலனும் மரியாதையும் எங்களுக்கு கிடைக்க வேண்டும் என எதிர்பார்ப்பது பிழையா? ஐம்பது டொலர் கொடுத்து அபிஷேகம் செய்பவர்களையும் திருவிழா நாளில் எமக்குச் சரிசமனாக நடத்தினால் , இவ்வளவு காசை நாங்கள் கொடுத்து ஏன் திருவிழா நடத்த வேணும்.....

திருவிழா தவிர்ந்த மற்ற நாட்களில் நீங்கள் அபிஷேகம் செய்ததுண்டா?

பல தடவை செய்திருக்கிறோம். எம் முடைய குழந்தையின் பிறந்த நாளுக்கும் சோறு தீத்திய போதும் இந்த வருடம் அபிஷேகம் செய்தோம்.

உங்கள் குழந்தையின் பிறந்தநாளுக்கு அபிஷேகம் செய்யக் கோவிலில் பதிவு செய் யும்போது, அன்று வேறொருவரின் திருவிழா இருப்பதால் அபிஷேகம் செய்ய முடியாது என்றும், மறுநாள் வந்து செய்யும் படியும் கூறினால் அதை மனமார ஏற்றுக் கொள்வீர்களா?

"அதெப்படி முடியும். பிறந்த தினத்தில் தானே அபிஷேகம் செய்ய விரும்புவோம். கோவில் என்றால் எல்லாருக்கும் பொதுதானே"

நல்லது. நீங்கள் திருவிழா செய்த தினத் தில் இன்னொருவரின் பிள்ளையின் பிறந்த நாள். அவர் அன்று அபிஷே கம் செய்ய விரும் பினால், அந்த அபிஷேகத் தை ஆலயத்தில் செய்யலாமா?

அதுக்கில்லை. நாங்கள் இவ்வளவு காசு செலவழிக்க, இன்னொருத்தரின் அபி ஷேகத்தை அண்டைக்கு நடத்த எங்கடை மனம் ஒரு மாதிரி இருக்கு.

உங்களுடைய அபிஷேகத்தை இன் னொருவரின் திருவிழா நாளில் செய்ய கோவில் அனுமதிக்க வேண்டும் என்று சொன்னீர்கள். இன்னொருவரின் பிறந்த நாளுக்கு உங்கள் திருவிழா நாளில் அபிஷேகம் செய்தது தவறு என்கிறீர்கள். ஏன்?

நீங்கள் சொல்லுறது சரி. நான் கோவிலில் பிழை சொன்னது தவறு என் பது புரிகிறது.

உங்களில் தவறில்லை. சிலவேளைகளில் நாம் நியாயத்தின் மறுபக்கத்தைப் பார்க்க மறந்துவிடுகிறோம். இது சாதாரண மனித சுபாவம்.

ஒரு தப்பபிப்பிராயம் நீங்குகிறது. ஆலயங் களுக்கும் பக்தர்களுக்கும் இடைவெளி குறைகிறது.

*நியாயம் பொதுவானது!*

# சிந்திக்கச் சில நிமிடங்கள் ...

## கோவிலுக்குச் சென்று வீடு திரும்பும் போது கால் கழுவக்கூடாது. வீட்டுக்குச் சென்ற பின்னும் தாமதமாகவே கால் கழுவ வேண்டும்.

இது ஒரு வழமை. இந்த வழமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகிறது.

*********

கால் கழுவும் போது மனத்தில் இருக்கும் எண்ணம் அகன்றுவிடுகிறதாம். ஆலயத்துக்குள் செல்லும் போது கால் கழுவுவது எமது மனத்தில் உள்ள அழுக்காறுகள் நீங்கி சுத்தமுடன் ஆண்டவனை வணங்க வேண்டும் என்பதற்காக. ஆலயத்திலே லயமாகிய மனம், கால் கழுவும் போது அந்த சுத்த தன்மையை இழந்து விடக்கூடாது என்பதற்காக கால் கழுவக் கூடாது என்கிறார்கள். சில மணித்தியாலங்களுக்கே இந்த மன உணர்வு இருக்கும். அது படிப் படியாக நிலைக்கும் தன்மை பெறுகிறது. கால் கழுவும்போது மனத்தில் ஏற்பட்ட தூய்மை உடனே அகன்றுவிடும்.

*********

ஆலயத்திலே உள்ள சூழல் மனிதனில் ஒரு வகையான மின்னேற்றத்தை உருவாக்கும். இத னால்தான் ஆலயத்துக்குள் காலில் பாதணியுடன் செல்லக்கூடாது. தரையில் பாதம் பதிய நடக்க வேண்டும். பாதணியுடன் அல்லது வாகனத்தில் இருந்தபடி கடவுளை வணங்குவது பிரயோசனம் அற்றது. பாதத்தைக் கழுவியபின்னரே ஆலயத்துக்கள் செல்ல வேண்டும். stockings, socks அணிவதுகூட இந்த மின்னேற்றம் உடலுக்குள் பாய்வதைத் தடுக்கும்.

*********

கர்ப்பக்கிரகத்தில் உள்ள பஞ்சலோகங்களில் இருந்து வரும் சக்தியும், மணியொலிகள் மந்திர உச்சாடனம் போன்றவற்றில் இருந்து வரும் ஒலிஅலைகளும், சங்கொலி போன்றவற்றிலிருந்து வரும் அலைகடந்த ஒலிகளும் உருவாக்கும் மின்னேற்றம் உடலில் பாய்கிறது. ஆலயத்தைச் சுற்றி வருதலும், உடல் தரையில்பட பஞ்சாங்க, அட்டாங்க நமஸ்காரம் செய்வதும் இதற் காகத்தான். இந்த சக்தி சில மணி நேரம் உடலுக்குள் இருக்கும். இது சற்று அதிக நேரம் இருக்கவேண்டும் என்பதற்காக பலர் பூசை முடிந்த பின்னரும், வணங்கிய பின்னரும் சில மணி நேரம் ஆலயத்தில் இருந்துவிட்டுச் செல்வர். கால் கழுவும் போது, உடலில் ஏற்பட ட மின்னேற்றம் உடனடியாக அகல்கிறது. இங்கு மின்னேற்றம் என்று குறிப்பிட்டது இந்து விஞ் ஞானத்தில் உள்ள ஆத்மீக சக்தியை உருவாக்கும் அமைப்பு. நடைமுறை விஞ்ஞானத்தில் உள்ள இலத்திரனின் முழுமையான செயற்பாடு அல்ல.

ஆலயத்தில் அவசரமாய்போய் அருச்சனை செய்துவிட்டு ஓடிப்போறவர்கள் இதை அறியாமல் இருக்கலாம்.

# பதஞ்சலி பதிலளிக்கிறார்...

**முதலிரவு விரதம்**

**விவாகம் ஆகியபின் முதலிரவுக்கு முன்னர் அனுசரிக்கப்படும் திரிராத்திரி விரதம் என்று இருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன் . அது தற்போது நடைமுறையில் உள்ளதா?**

பதில் : திரிராத்திரி விரதம் என்பது விவாகத்துடனும் மற்றும் பல சடங்குகளுடனும் சம்பந்தப்பட்டது. விவாகத்தின் போது திரிராத்திரி விரதமும் அதனைத் தொடர்ந்து செய்யப்படும் சதுர்த்த கர்மம் என்பதும் நாளடைவில் மாறிவிட்டது. இப்போது சதுர்த்த கர்மம் என்பதை நான்காம் நாள் சடங்கு என்று வழங்குகிறார்கள். திருமணத்தின் பின்னர் மூன்று நாட்களுக்கு மணமக்கள் இருவரும் கார உணவுகள் உட்கொள்ளாது, உடலுறவு கொள்ளாது தரையில் உறங்கவேண்டும். மூன்று நாட்களின் பின்னர்

'தன்னுடைய மனைவியிடம் இது வரை காலமும் இருந்த வேற்றுக் காம எண்ணங்கள் மறைந்து தன் னினைவு மட்டும் இருக்க வேண்டும்'

என்று கணவனும்,

'தன் கணவனின் நுகர்வு எண்ணங்கள் தன்னில் மட்டுமே இருக்க வேண்டும்'

என்று மனைவியும் தெய்வத்தினை வணங்கி, அதன்பின்னரே அவர்கள் கணவன் மனைவி ஆவார்கள். நான்காவது நாளில் உண்டு உறங்கி கொண்டாடி மகிழ்வது அன்றைய வழமை. கணவன் மனைவி இருவரும் ஒருவரை

ஒருவர் புரிந்து தம் எண்ணங்களைப் பகிர்ந்து நல்லதொரு ஸ்திரமான வாழ்க்கையை நடத்த இந்த விரதம் இன்றைய காலத்தில் அவசியம். வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே தம் மன எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பம். இன்றைய காலத்தில், தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் இல்லாது, உள்ளம் - உடல் உணர்வுகளை அறியாத இல்லற வாழ்க்கைகள் நடுக்கடலில் தத்தளிப்பதைப் பலர் கண்டிருப்பீர்கள். முதலிரவுக்கு முன்னர் திரிராத்திரி விரதம் இருக்காதவர்கள், திருமணமாகிய பின்னராவது தனியாக வேறுசிந்தனை இல்லாமல் உங்கள் மனங்களைப் பகிர்ந்து கொள்ள மூன்று நாட்களை ஒதுக்குங்கள்.

வாழ்க்கை முழுவதும் சந்தோசம் ஏற்பட இந்தப் புரிந்துணர்வு உதவும். இந்துசமயத்தில் ஏற்படுத்திய சடங்குகள் ஒவ்வொன்றும் முக்காலமும் உணர்ந்த முனிவர்கள் உருவாக்கியது. அந்தச் சடங்குகளின் காரணங்கள் புரியாதவர்கள் சிலர் இவை மூட நம்பிக்கை என்றும், அநாகரீகம் என்றும் கூறும் போது இவர்களின் சிற்றறிவுக்குள் அவ்வளவுதான் உண்டு என நினைத்துக் கொள்ளுங்கள்.

**எனது குழந்தைக்குக் கலை கற்பிக்க நல்ல நாள் பார்த்தால் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு குறை வருகிறது. எந்தவொரு குறையும் இல்லாத நாள் நேரம் ஒன்று சொல்லுங்கள்.**

*பதில்: தமிழ் முறைப்படி, 5 வயது 5 மாதம் 5 நாள் 5 நாழிகை 5 விநாடி. ஆரம்பக் கற்றலுக்கு உரிய நாளாகக் கொள்ளலாம்.*

**தென்னிந்தியாவில் எத்தனையோ சித்தர்கள் சுவாமிகள் தோன்றியுள்ளனர். ஈழத்தில் யாராவது அவ்வாறு தோன்றியுள்ளனரா?**

பலர். அதில் அண்மைக்காலப் புகழ் பெற்றவர்கள் மூவர். யோகசுவாமி, செல்லப்பா சுவாமி, கடையிற் சுவாமி. கடையிற்சுவாமி ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி. தனது தொழிலைத் துறந்து சாமியாராகியவர். செல்லப்பா சுவாமியும் இளமையிலே துறவியாகிப் பல சித்துக்கள் செய்து சமயதத்துவங்களை விளக்கிவர். யோகசுவாமி அநேகரால் இன்றும் நினைவுகூரப் படுபவர். யோகசுவாமியின் சீடராகிய அமரிக்கர், சற்குரு சுப்பிரமணிய சுவாமியாக ஹவாயில் ஆதீனம் அமைந்து அமரிக்காவில் பக்தியைப் பரப் பிவருகிறார். "ஆலயங்கள் அமைத்து

# ஏன் இப்படி ....?

*1998 மாசி மாதம். சிவராத்திரி தினம் ஆலயம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். மறு நாள் வேலை. முதலாவது சாமப் பூசையையாவது பார்த்துவிட வேண்டும் என்று குழந்தைகளையும் அழைத்து வந்தேன். அன்று நித்திரை விழிக்க முடியாமல் இருந்தாலும் அந்தச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்ததில் மனத்தில் சந்தோசமாக இருந்தது. இந்தச் சந்தோசம் ஆலயத்தை விட்டு வெளியில் சென்றபோது மனவேதனையாக இருந்தது.*

*ஏதோ ஒரு சமயப் புத்தகம் விற்றுக் கொண்டிருந்தனர்.*

*"இந்தக் கோவிலுக்கு அள்ளித் தெளிக்கிற காசை எங்களுக் தாங்கோ. இவங்கள் கோவிலா நடத்திறாங்கள்? நாங்கள் எவ்வளவு கஸ்டப்பட்டு சமய வளர்ச்சிக்காக புத்தகம் வெளியிடுகிறோம்"*

*என்று கூறி என்னுடைய கையில் புத்தகத்தைத் தந்தார்கள். மனத்தில் வேதனையாக இருந்தது. புத்தகத்தை வாங்க எனக்கு விருப்பம். சமயப் புத்தகங்கள் பல கனடாவில் வெளிவருவதை நாம் ஆதரிக்க வேண்டும். ஆனால் ஆலயத்துக்கு முன்னாலே நின்று கொண்டு ஆலயத்தையே அவதூறு சொல்லும் இவர்களா சமயத்தை வளர்க்கப் போகிறார்கள் என்று கேட்கவேண்டும் போல் இருந்தது. ஆனால் நான் கேட்கவில்லை. ஏனென்றால் அப்படிக் கேட்டால் எனக்கும் அவர்களுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும்.*

*இருந்தாலும், புத்தகத்தை விற்றவர்கள் நடந்து கொண்ட முறைக்காக புத்தகத்தையே வாங்காமல் வந்துவிட்டேனே என்பது எனக்கு என்னவோ தப்புச் செய்துவிட்டதாகவே தெரிந்தது. மீண்டும் திரும்பி வந்து அந்த புத்தகத்தை வாங்கிச் சென்றேன்.*

*எம்முடைய சமயத்தை வளர்ப்பதாகச் சொல்லியே எம்முடைய சமயத்தை இழிவாக்குவது எனக்கு இன்னும் மனச் சோர்வையே அளிக்கிறது.*

*பக்கத்தில் இருப்பவனைத் தூற்றுவதால் தாம் சுத்தம் எனக் காட்ட முயல்வது தமிழர்களின் அரசியலில் வழமைதான். ஆனால் அது சமய வளர்ச்சிக்கு உகந்தது அல்ல.*

*"பணிவுடையன் இன் சொலனாதல் ஒருவர்க்கு அணி" என்று தமிழ் மறை கூறுகிறது.*

பக்தர் ஒருவர் ஆலயத்தில் இன்னொருவருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது காதில் விழுந்த சில......

**றொறன்ரோ ஸ்ரீ துர்க்கா இந்து ஆலய அறிவித்தல்**

**இந்துசமயப் பணியில்**
**றொறன்ரோ ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம்**

**ஸ்ரீ துர்க்கா இந்து ஆலய போதனாகூடம்**

1. தமிழ்க்கலை - இசை வகுப்புக்கள்
2. தமிழ்க்கலை - வாத்திய வகுப்புக்கள்
3. தமிழ்க்கலை - நடன வகுப்புக்கள்
4. தமிழ் - ஆரம்ப பாட வகுப்புக்கள்
5. தமிழ் - கவிதை, இலக்கிய ஆய்வுகள்
6. இந்துசமயம் - தமிழில் வகுப்புக்கள்
7. இந்துசமயம் - ஆங்கிலத்தில் வகுப்புக்கள்
8. அந்தண மாணவர்களுக்கு வடமொழி வகுப்பு
9. முதியோர்களுக்கு சமயநெறி விளக்கம்

இந்துசமய வளர்ச்சிக்கான எமது கல்விப்பணியில் ஆரம்ப கட்டமாக இசை, வாத்திய வகுப்புக்கள் ஆரம்பித்துள்ளோம்.

ஆலய கும்பாபிஷேக வேலைகள் முடிந்த பின்னர் எமது கல்வித்திட்டங்களைப் பூரணமாகச் செய்ய அன்னை துர்க்கா அம்பாள் அருள்புரிவாராகுக.

*ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவளிப்பாயாக" என்று தனது குருநாதரிடம் ஆசி பெற்ற சுப்பிரமணிய சுவாமிகள் உள்ளத் தூய்மையோடு சமயப்பணி செய்துவருகிறார்.*

**இந்துசமயத்தில் உள்ள அநேக நூல்கள் வடமொழி மூலத்தில் இருந்து வந்திருக்கின்றன. எத்தனையோ தமிழர்கள்கூட வடமொழியில்தான் தமது நூல்களை எழுதினார்கள். தமிழில் எழுதப்பட்ட ஏதாவது நூல் வடமொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதா?**

*முக்கியமான ஒன்று உபமன்யு பக்தவிலாசம் என்ற நூல் சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தின் மொழிபெயர்ப்பு.*

**திருமணப் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்யும்படி இந்துசமயத்தில் கூறப்படவில்லையாமே. பொருத்தம் பார்த்துத்தான் திருமணம் செய்ய வேண்டுமா?**

*வேத, ஆகம, உபநிடதங்களில் பொருத்தம் பற்றி இல்லை எனக் கூறப்படுகிறது. இவ்வாறான விடயங்கள் பற்றி எழுதப்பெற்ற கிருஹ்ய சூத்திரத்திலும் ஜாதகப் பொருத்தம் பற்றி கூறப்படவில்லை. சாமுத்திரிகா லட்சணத்தைப் பார்த்து ஆண் பெண் இருவரையும் இணைக்கும்படி உள்ளது. ஏதோ ஒரு வகையில் பொருத்தம் தேவை என்பதை இது அறிவுறுத்துகிறது. சாமுத்திரிகா இலட்சணம் கூறும் பொருத்தத்திலும், சாதகப் பொருத்தம் நுட்பமானது என பின்னைய நூல்கள் கூறும்.*

# பெயர் வைப்பதில் என்ன பிரச்சனை?

இப்போதெல்லாம் குழந்தைக்குப் பெயர் வைப்பது பெரிய பிரச்சனை. நியூ மோறோலஜி என்று பலர் இலக்கங்களைக் கூட்டிப் பார்த்துப் பார்த்து அலுத்து விடுவார்கள்.

அப்பாவின் இனிஷலின் இலக்கத்துடன் குழந்தையின் பெயர் இலக்கத்தைக் கூட்டிப் பார்ப்பது என்று சிலர் கணக்குப் போடுவார்கள்.

**"அப்படியில்லை .. கூப்பிடும் பெயரின் இலக்கத்தைப் போடவேண்டும்"** என்று சிலர் கணக்குப் பண்ணுவார்கள். அவரவர் நம்பிக்கைக்கு ஏற்பச் செய்து கொண்டால், யாராவது சோதிடர்கள் வந்து பெயரை மாற்றுங்கள் அதனால் பிரச்சனை தீர்ந்துவிடும் என்பார்கள்.

பெயரை மாற்றி, ஆங்கில எழுத்துக்களை கண்டபடி சேர்த்து சிலவேளை நாமே உச்சரிக்கக் கஷ்டப்ப வேண்டி ஏற்பட்டுவிடுகிறது.

இந்துசமயத்தின் சில நூல்கள் பெயர் எப்படி அமையவேண்டும் என்பது பற்றியும் கூறியுள்ளது. இதை நீங்கள் அறியாது இருக்கலாம். இந்தக் கருத்துக்களில் பல அபிப்பிராய பேதங்கள் இருப்பினும், அவற்றைக் கூறியவர்கள் முனிவர்களாகவோ, அன்றைய கால ஆய்வாளர்களாகவோ இருப்பதனால் அது பற்றிக் கொஞ்சம் பார்ப்போமா?

வேதகாலத்தில் ஒருவருக்கு இரண்டு பெயர்கள் வைக்கும் முறை இருந்தது. **Middle name** வைப்பது போல.

பராஸ்கரா கிருஹ்யசூத்திரம், அஸ்வாலாயன கிருஹ்யசூத்திரம், வசிஸ்டர், பஜபவா போன்றவர்களின் கருத்துக்களின் சாரம்சம் இது :

ஆண் குழந்தைக்கு இரண்டு அல்லது நான்கு சீர் ஆக பெயர் அமைவது சிறந்தது. நெடில் அல்லது மெய் எழுத்து இறுதியாக அமையலாம். .

க ஜன், பொற் கோ, கண் ணன்

பெண்குழந்தைகளுக்கு ஒற்றைப்பட்ட சீர்களில் பெயர் வைக்கவும். (விசேடமாக மூன்று சீர்களில் **"இ"** என முடிவதாக அமைவது நல்லது). வாயில் இலகுவில் நுழையக்கூடிய இனிமையான பெயர்களாக இருக்க வேண்டும்.

வா சு கி, பா ம தி, வ சந் தி

ஆண்களுக்கு ஆண்மையைப் பிரதிபலிக்கும் பெயர்களையும் பெண்களுக்குப் பெண்மையைப் பிரதிபலிக்கும் பெயரையும் வைக்க வேண்டும்.

பிறந்த நட்சத்திரத்துக்கு அமைவான எழுத்தில் பெயர் ஆரம்பித்து பெயர் அமையலாம். ஏதாவது ஒருவகையில் தெய்வத்தின் பெயராக அல்லது சம்பந்தப்பட்டதாக அமையலாம்.

சம காலத்தில் புகழ் பெற்றதான பெயரையும் அமைத்துக் கொள்ளலாம்.

உதாரணமாக, சா லி னி, ப்ர சாந்

# கனேடியத் தமிழ் ஒலிபரப்பு

## ஒரு நேயரின் பார்வையில் ..

**கலைப்பிரியன்**

"சுயவிளம்பரத்திலோ அல்லது விமர்சனத்திலோ தன் வாழ்வைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் (சிரிபிசி) இன்று இல்லை"

என்பது முற்றிலும் உண்மை. அதற்கான காரணம் இரண்டு. ஒன்று தரம். இரண்டு Monopoly ... அதாவது ஏகபோகம்.

Monopoly என்பது Oligopoly ஆகும்போது தொழில்ரீதியில் சிரிபிசி சில நகர்வுகளைச் செய்ய வேண்டியது அவசியம். அவ்வாறான ஒரு நிலைப்பாடு தோன்றும் சாத்தியம் இப்போது உண்டு.

அண்மைக்காலத்தில், வானொலி ஆர்வம் கொண்ட சிலரால் பெறப்பட்ட புள்ளிவிபரங்களின்படி, ஒலிபரப்புக்களின் தாபனரீதியான ஸ்திரம் கேள்விக்குறியாக அமைவதை அறியக்கூடியதாக உள்ளது. உள்ளபடி சொன்னால், போட்டி ஸ்தாபனங்கள் முறையான அணுகுமுறையை மேற்கொண்டால், சில காலத்துக்கு ஒலிபரப்புக்கள் அத்தனையும் ஸ்திரம் இழந்து ... காலக்கிரமத்தில் ஏதாவது ஒன்றே நிலைக்கும். அந்தக் கால இடைவெளிக்குள் ஏற்கெனவே கலாச்சார குழப்பத்தில் இருக்கும் தமிழினம் தடம் புரண்டுவிடும்... சலித்துவிடும்.

சிரிபிசி வானொலி அலட்சியமாக இருப்பினும், நேயர்களாகிய நாம் எமது கடமையைச் செய்தல் அவசியம். அதன் ஒரு விளைவுதான் இந்த விமர்சனம். தமிழில் உள்ள ஒரு கரிசனையாக இதை நான் கருதுகிறேன்.

**மந்திரக்கோல் ...**

இந்த ஒலிபரப்பு உலகமே ஒரு தனி. சிரிக்காமல் சிரிப்பார்கள்: அழாமல் அழுவார்கள.

ஏன்... கடிக்காமல் கடிக்கவும் செய்வார்கள்....

இந்த மந்திரக் கோலால்,
உண்மை உண்மையாகலாம்:
பொய் பொய்யாகலாம்:
அது மட்டும் அல்ல,
பொய்யும் உண்மையாகலாம்..
உண்மையும் பொய்யாகலாம்.....

அப்பேர்ப்பட்ட ஒரு விசித்திரமான சாதனம் தான் இந்த ஒலிபரப்புத்துறை. இந்தச் சாதனத்தைப் பயன்படுத்தும் போது வெற்றி, தோல்வி போலவும் தெரியும்... தோல்வி வெற்றி போலவும் தெரியும்.

உலகத்தையே மனக்கண் முன்னால் நிறுத்தும் மகத்தான ஒரு சக்திதான் ஒலிபரப்பு. இந்த சக்தி சரியான கையில் கிடைக்கும்போது சமூகம் பலன் பெறுகிறது. தப்பான கையில் கிடைத்தால் அதோ கதிதான்!

**ஒலிபரப்பின் அளவீடு**

கனடாவில் உள்ள ஒலிபரப்புக்கள் தமிழை எந்த முறையில் அணுகுகின்றன...? சமூகத்தை எந்த முறையில் அணுகுகின்றன...? இன ஒற்றுமையை எவ்வாறு சிந்திக்கின்றன ....? உலகநிலைப்பாட்டில் தமிழ் மக்களின் உயர்வை எப்படி உறுதிப்படுத்த முயற்சி செய்கின்றன..? மொழி, மதம், இனம், நாடு எல்லாவற்றையும் கடந்த மனித நேயத்துக்கு எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கின்றன....?

**இதுதான் மக்கள் சார்ந்த நிலையில் ஒலிபரப்புக்களின் அளவுகோல்.**

ஒரு ஒலிபரப்பு, தொழில் நிறுவனங்களின் உற்பத்தியை எந்த அளவில் மக்கள் மனத்தில் பதிய வைத்திருக்கிறது...? தொழில் ஸ்தாபனங்களின் வளர்ச்சியுடன் கைகோர்ப்பதில் எவ்வளவு அக்கறை காட்டுகிறது....? ஒலிபரப்பு நிலையம் எத்தனை பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கி உள்ளது..? சேவைகளினால் ஏற்படும் பணச் சுழற்சி வேகத்தில், ஒலிபரப்பு ஸ்தாபனம் ஏற்படுத்தும் பொருளாதாரப் பங்கு எவ்வளவு..?

**இது நாடு சார்ந்த நிலையில் ஒலிபரப்புக்களின் அளவுகோல்.**

உயர்ந்த தரத்தைக் குறைந்த செலவுக்குள் அடக்கும் யுக்தி... வருமானம் உயர்வடைய படிப்படியான வழிமுறைகள்.. சேவைகளின் கிளை கொள்ளுகை... போட்டி ஸ்தாபனங்களுடன் 'மல்லுக்கட்டி மடக்கும்' விவேகம்...

**இது சுயரீதியில் ஒலிபரப்பின் அளவுகோல்.**

இந்த மூன்று அளவீட்டிலும் பெருமைப்படத்தக்க அளவு உயர் நிலையில் சிரிபிசி இருப்பது கண்கூடு. அந்த உயர்நிலை ஆரம்ப காலத்தில் இருந்து சரியான முறையில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இதில் பாதி பங்கு நேயர்கள். மறுபாதி பங்கு ஒலிபரப்புக் கலைஞர்கள்.

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

கடந்த மூன்று ஆண்டுகளாக முற்றாக முழுகியபோது, கனேடியத் தமிழ் ஒலிபரப்பில் முத்துக்கள் மட்டும்தான் வரும் என்று எதிர்பார்த்திருந்த தமிழ் மக்கள், அங்கே பவளங்களும், வைடூரியங்களும், மரகதங்களும் கிடக்கக் கண்டு மகிழ்ந்திருக்கும் காலம்.

ஒரு கலைஞனை அடையாளம் காட்டுவது காலம்தான். அந்தக் காலத்துக்குள் கடைசிவரையும் கலைத்திறனை வெளிக்காட்ட எவன் திடசங்கற்பம் கொள்கிறானோ அவன் கலைக்கு மேன்மைத்துவம் அளிக்கிறான்.

**அந்த அவனாக ... இளையபாரதி.**

**அந்தக் கலைஞனின் பாசறையில் தம் பணி உணர்ந்த சகோதரக்கலைஞர்கள்.**

இந்தக் கலைப்பணியாளர்களின் கைவண்ணத்தில் கலையுருப்பெற்ற கருவூலங்கள் .... மொழி வண்ணங்களால் முகிழ்ந்த கலைப்பூங்காவின் வாசமலர்கள்.

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

"புதிய மலர்களின் புதிய மணம்
முறுவலிக்கும் மழலை மலர்களின்
அழகு தமிழ்
மொட்டவிழ்ந்து தென்றலுக்கும்
வசந்தத்துக்கும் வித்தியாசம்
தேடும் இளைய மனம்
மொய்குழலார் முழந்தாள்கள்
எழுந்து நிற்கும் புதிய தளம்
மோனத்து உள்ளம் வானத்தில்
ஏற வழி சொல்லும் களம்

அவ்வாறு ஒரு கவிஞன் துணிந்து சொல்லக் கூடிய அளவுக்கு விழுதுகளை ஊன்றிய சிரிபிசி, தமிழோடிணைந்த தனது கடமைச் செய்ய முனைந்திருக்கிறது. அந்த முனைப்பு பூரணத்துவம் பெறாவிடினும் மானசீகமானது என்பதை நேயர்கள்

உணர வைத்திருக்கிறார்கள்.

**இன உணர்வுப் பணி**

இன உணர்வுகளை வெளிப்படுத்தும் பணியில் இந்த வானொலி போதியளவு பங்காற்றி இருப்பது வெளிப்படையானது.

அதே போன்று பாராட்டுக்குரிய இன்னொரு விடயம்.... இன உணர்வுப் பங்களிப்பில் பாரபட்சமின்றி நடந்து கொள்வது: அந்தப் பாரபட்சமின்மை எதிர்நோக்கும் பிரச்சனைகளை இலாவகமாகக் கையாள்வது:

வானொலி என்ற வகையில் இதைவிட எதையும் எவரும் செய்துவிடமுடியாது. அந்தப் பொறுப்பு இந்த வானொலியால் செவ்வனே உணரப்பட்டிருக்கிறது. ஆயினும் அண்மைக்காலத்தில் 'அளவுக்கதிகம்-மிகைப்படுத்துகை' என்றவொரு கருத்துக்கூட சில மட்டங்களில் பேசப்படுகிறது. இது உண்மையில் மேலதிகமாக இருப்பினும் காலத்தின்தேவையேதான்.

**கலை உற்பத்தி**

கலைஞர்களை இனம் கண்டு உற்சாகம் அளித்து வெளிக்கொணர்வது வானொலியின் இன்னொரு பணி.

மனம் விட்டுக் கூறவேண்டுமானால் அந்தப்பணியை நிகரில்லா வகையில் செய்துவரும் திறமை அபாரமானது.

அண்மையிலே ஒரு நிகழ்ச்சி ஞாபகம் வருகிறது.

ராஜா அவர்களின் மெட்டமைப்புக்கு வசந்தி ராஜா என்ற நேயர் பாடல் வரிகள் எழுதி அது வானலைகளில் பரிசு பெற்றது. ஒரு மூன்று ஆண்டுகளுக்குள் கவிதைத் துறையில் ஒரு நேயருக்கு இந்தளவு திறமையை ஏற்படச் செய்தமை சிரிபிசியின் பெருவெற்றி. உண்மையிலே அந்த நேயரின் கவிதை வரிகள் மெச்சும்படியாக இருந்தன. அன்றைய காலத்தில் திரை நட்சத்திரங்களை உருவாக்கிய பெருமையை பாலச்சந்தர், ஸ்ரீதர் போன்றவர்கள் பெற்றதைப்போல, இன்று கலை நட்சத்திரங்களை கனடாவில் உருவாக்கும் கலாதரனின் பணி மெச்சுதற்குரியது.

நிகழ்ச்சிகளை நடத்தும் அறிவிப்பாளர்கள் வேறுபட்ட உத்திகளைக் கையாண்டிருக்கின்றனர். அவை இரசிக்கக் கூடியவாயும் வித்தியாசமானவையாகவும் இருந்திருக்கின்றன. பொறியியலாளர், கம்பியூட்டர் புறொகிறாமர், பல்கலைக் கழக மாணவர்கள், ஒலிபரப்பு அனுபவம் கொண்டோர், அரசாங்க உத்தியோகத்தர், அந்தண குலத்தோர் போன்ற பல்வேறு ரகங்களின் ஒரு அணியாக ஒலிபரப்பு அமைந்தமை சிறப்பான நிகழச்சிகள் வரக் காரணமாக இருக்கலாம்.

இந்த வானொலியில் ஒலிபரப்பாளர்களின் "ஒரு தன்மை" பற்றி இரு விதமான கருத்து உண்டு. குறிப்பிட்ட ஒரு துறையில் ஒலிபரப்பாளர்கள் தமது "தனித்துவம்" பேணுவதில்லை என்பதுதான் அது. எல்லாவிதமான நிகழ்ச்சிகளிலும் எல்லாவிதமான மட்டங்களிலும் ஒலிபரப்பாளர் கலந்து கொள்வது, அந்த ஒலிபரப்பாளரின் திறமையை வெளிப்படுத்துவதாக இருப்பினும் நிகழச்சியின் சோபிதத்தைக் குறைக்கும் என்பது சிலர் அபிப்பிராயம்.

உதாரணமாக ... அரசியல் தலைவர் ஒருவருடன் அரசியல் பொருளாதார விடயங்களை நுணுக்கமாக ஆராயும் ஒரு நிகழச்சி முடிந்த கையோடு, இளையபாரதி அவர்கள், நேயர்களுடன் நகைச்சுவையாகக் 'குட்டிக் கதை' சொல்லும்போது ... அது இளைய பாரதியின் நல்ல மனதைக்காட்டுகிறது. ஆனால் இளையபாரதி சற்று முன்னால் செய்த நுணுக்கமான அரசியல் அலசல் எடுபடாத தன்மை அடைகிறது.

ஆனால் வேறுசில நேயர்கள் ஒலிபரப்பாளர் "சமத்துவ" போக்கில் இருப்பதை வரவேற்கினறனர்.

தேடுகை என்பது முடிவில்லாதது என்ற கருத்து பல ஒலிபரப்பாளர்களிடமிருந்து அடிக்கடி வானலையில் வந்திருக்கிறது. ஆனால் ...

எதை? எப்போது? எங்கே? யாரிடம்? என்ற கேள்விகளுக்கு பாரபட்சமற்ற காழ்ப்புணர்வற்ற பதிலை இவர்கள் அறிய முயற்சிக்கும் வரை, நேயர்களுக்கும் தேடுதல் இருக்கும் என்பது இயல்பானது. அந்தத் தேடுதலில் நேயர்கள் திசை மாறமுன்பு, இவர்களின் தேடுதல் நெறிப்படும் என்பதும் நம்பிக்கை.

சிரிபிசியில் எனக்கு மிகவும் பிடித்தது
அதனுடைய நெஞ்சுரம்...
அன்று..
உற்சாகத்தை உருக்குலைக்கும்
சக்திகள் ....
வசைமாரிகள் ...
குத்தல் பேச்சுக்கள்...
குணக்கேடான செய்கைகள்...
இத்தனையும் ஒருமித்து
ஓங்கி அறைந்த போதும் நெஞ்சை நிமிர்த்தி

# வானொலி உலகின் வரப்பிரசாதம்

அடுத்தது மீள்கருத்து ஊண் ... feedback.

நேயர்களின் கருத்துக்கள் செவிசாய்க்கப் பெற்றிருக்கின்றன. நிகழ்ச்சி மெருகூட்டப் பெற்றிருக்கிறது.

நிகழச்சிகள் மனத்துக்கு இதம் அளிக்கும்படி அமைப்பதில் உள்ள நாட்டம், மக்களின் சிந்தனையை மாற்றுவதாக அமைப்பதில் போதியதாக இல்லை. இது ஒலிபரப்பாளரின் குறை என்று கூறமுடியாது. அவ்வாறான கனதியான விடயங்களை நேயர்கள்கூட விரும்புகிறார்கள் இல்லை. கனதியான கருத்துக்கள் வானலையில் தடக்குகிறது. உதாரணமாக, யதார்த்தமான கருத்துக்களை சில நேயர் கூற வரும்போது, அதை ஜீரணிப்பதில் ஒலிபரப்பாளர்களும் நேயர்களும் படும் பாடு, பக்குவநிலையைக் கேள்விக்குறியாக் குகிறது!

நின்ற அந்தத் தைரியம்.
அந்த நெஞ்சுரம்....நேர்மைத் திறன்..

அதுதான் மக்கள் மத்தியில் இந்த ஒலிபரப்பு நிலைகொள்ளக் காரணமாகியது. இந்த நிலைகொள்ளல் மிகவும் கெட்டியானது.

இந்த இறுக்கம் என்றைக்கும் நிலைக்க, கால அனர்தங்களாலான ஒட்டு உடைசல்களைப் பூசுதலும் அவசியம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சிரிபிசி வானொலியினது மூவாண்டுப் பூர்த்திக்கு எம்மினிய வாழ்த்துக்களையும், மெல்லியதான ஒரு உசாரையும் தருவதில் ஓர் திருப்தியான நட்புணர்வு.

தமிழ் உரைத்தோர் தமிழர்
தமிழ் உரைத்த தோர் தமிழர்
தமிழர் உரைத்த தமிழர்
நீங்கள்!!!
வாழ்த்துக்கள்

# Are you a vegetarion? No ! Why?

**"Vegetarianism"**

A hopeful move in western culture. Doctors are in favor of eating more vegetables, grains and fruits. Medical organizations are calling for reduction in fat intake.

12 million Americans claim themselves as vegetarians. Number of vegetarians increase in Canada too.

It's a change.

Really a demanding change.

Another good news.

Number of vegetarian teenagers in North America is growing very fast. Some polls indicate that one in four teens wants to be a vegetarian. It is hard to believe. Isn't it?

Sir Isaac Newton
Albert Einstein
George Bernard Shaw
Voltaire

Carl Lewis
Bill Walton

and many more ..

All are vegetarian. It proves the share of vegetarianism in brain power and physical power.

If all these westerners can be a vegetarian ....

Why can't a Ravindran or a Vasanthy from Tamil society become as a vegetarian?

Why can't kids like Kapilan or Sagana understand the values of vegetarianism?

I am asking you .. Tamil Hindus! You know that your religion insists on vegetarianism.

Still, you are reluctant to accept vegetarianism.

I know why...

Most of you think that following Hinduism degrades your social life in Canada.

Many mothers think that vegetation food is not suitable for young kids and teenagers. This is a reasonless fear. Medical organizations stated that vegetarian meals are fine for kids. An amazing fact is that children who eat vegetarian meals are tall and stronger than meat eating counterparts.

The major problem in becoming a vegetarian is this, a student says,

"In school... in friend houses ... among visiting relatives .. vegetarians encounter awkward situations. We are becoming social outcasts, sometimes teasing from friends and it is really annoying. For example, we visit to a friend's house and there is no vegetation meals. We don't want to embrace them.

In this situation what can we do?

There is no choice.

Most of the tamils think that, offering a meal without goat meat is insulting guests. They don't even ask us about our preferences................

It is a real story. Many of you may have faced similar situations.

The only solution is.. say it beforehand.

"By the way, you know sumathy, my daughter is a vegetarian"

By saying this, you are safe and the host will be happy to know your preferences.

"Vegetarians don't get iron" some people says.

"Vegetarians don't get enough protein" another one says.

These people never try to know the truth. They just want to find some excuses not to be vegetarian.

Do the vegetation gets enough iron, protein or vitamins?

Sure, they do.

If one consumes variety of vegetarian diet will get enough diet. Diary products contains protein more than enough. Egg eating vegetarian gets plenty. Vitamins are found in vegetables, cheese, milk and yogurt. The vegetarians who consumes tomato, orange, grape fruit gets vitamin C. Vitamin C enhances absorption of plant iorn. Cooking foods in iron pots multiply the iron content of your food.

There is a question. Can a Hindu eat eggs?

Food obtained by killing or give suffering to an animal is not acceptable. Foods like milk, honey is therefore acceptable. Eggs which does not contain embryo is reasonably acceptable in Hinduism.

Now vegetarianism is a world mass mission.

- Sevvanthy

# Kids Study ground



**(This section is only for kids under 9 years of age)**

It's easy.You could win. Even if you don't win, you are gaining some knowledge... in English, in Maths, in Science... and ultimately in your religion.
you don't know the answer? ... skip that question.
If you participate in this contest, you are eligible for the draw. For a lucky winner, we will send a gift.

**Please send the answers with self addressed stamped envelope to Toronto Sri Durka Hindu Temple.**

## Match with the correct word

| | |
|---|---|
| April 14, 1999 (In Toronto) | Ganesha |
| Temple tower | Saraswathy |
| Special worship on Tuesdays | Durka |
| God's name chanted | Shiva |
| Bathing of deity's Image | vishnu |
| Lord for wisdom | Gopuram |
| Lord for protection | Archanai |
| cobra as ornament | Abisekam |
| Elephant face | Viputhi |
| Holy Ash | Tamil Hindu New Year |

NAME : ..........................................

AGE : ..........................................

ADDRESS: ..........................................
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................

TELEPHONE : ..........................................

Write your name in your mother language .

..........................................

Write the names of the Hindu deities you know .

..........................................
..........................................
..........................................
..........................................
..........................................

Which Hindu temple is nearest to your home?

..........................................
..........................................
..........................................

Why do you go to the temple?

..........................................
..........................................
..........................................

# Hindu Forum

## The caste system is absolutely bad

*The caste system is absolutely bad. Why do you have it? Can you say even one word in favour of it?*

(Answer from Sri Chinmoy)

Well, I must take exception to your comment and tell you that in this world there is nothing absolutely bad. The caste system has served and even now continues to serve a certain purpose. In spite of all its degenerations, it has been a system that has united the different parts of society. If we try to see it as a system uniting people instead of dividing them, we will better understand the value it has had for thousands of years. Society was conceived as a great family. Each group worked to make it function harmoniously. In a family, one brother may be a spiritual teacher, another an executive, third a merchant and the fourth a farmer. Each one helps his family in his own way at the time of need. It is their combined knowledge and a harmonious co-operation which create a real unity in their family life. So was it originally with the caste system. **In its ideal form the caste system has much truth and value, but the wrong attitude which has entered into it through human ignorance require that the present system be supplemented with something more suited to modern and advanced society.**

## Woman's individuality

*Hindu wives surrender to their husbands. Why do they not care for their own individuality?*

(Answer from Sri Chinmoy)

I hope that you know the meaning of surrender. In real surrender, we do not lose our individuality. On the contrary, we enlarge it. For example, when we surrender ourselves absolutely to god, we become one with god in our adoration for him. His power is then added to ours. Surrender is entirely voluntary. Submitting out of fear, to someone more powerful than ourselves, is not surrender. True surrender is great strength which fulfil itself when it becomes one with the object of its adoration. In India women cheerfully and unreservedly surrender their very existence to their husbands and get the real joy of true union.

## Weekend weddings

*In Toronto most of the Hindu weddings (remarkably in Tamil community) are celebrated on week ends. Is this practice acceptable?*

(Answer from Editor)

Absolute restriction is meaningless in Hinduism as far as it is nothing to with moral issues. The elective astrology in it's current form, is a later development in Hinduism. The 'richi's who were well known in astrologers world, states there is nothing called "ideal muhurtham". There is always bad and good aspect in each muhurtham. The "vara dosha" does not play a main role in selecting the auspicious time. Therefore, "weekend wedding" is not objectionable. But, selecting a muhurtha with much more good aspects is always recommendable. After a muhutham has been determined, whether good or bad, commenting on 'muhurtham' should be avoided. Psychological effect is more important than anything else. Most of the comments on "muhurtham" is the result of jealousy among astrologers and priests. We should realize that commenting bad on "Suba kariyam" will affect the couple's life and it is deemed as absolute intrusion in others life.

Hinduism always respect the needs of everyone.


**Computers in the development of**

**Hinduism & Tamil language**

**studies by "Canada Hindu Publications"**

**E-mail your articles to krish@idirect.com**

**Seminar for Interest groups will be arranged soon.**

**sponsored by Toronto Sri durka Hindu Temple.**

# குவாலிற்றி பூக்கடை



ரொறன்ரோவில் முதன் முதலாக ஈழத்தமிழர்களின் நிர்வாகத்தின் கீழ் 25 வருட அனுபவத்தின் கைவண்ணம், அழகான பூ வண்ணம் மாலைகள், சோலைகளாய் சோபிக்கும் தமிழ் மலர்த் தோட்டம்.

1662 விக்ரோரியா பார்க் ஸ்ரீவள்ளி புடவைக்கடையினுள்ளே குவாலிற்றி பூக்கடை

உங்கள் மங்களகரமான அனைத்துத் தேவைகளுக்கும் பிள்ளையின் சிறந்த சேவையைப் பெற்றிட நாடுங்கள் குவாலிற்றி பூக்கடையை, மற்றும் மரணச்சடங்குகளுக்கு தேவையான மலர்வளையம், பூச்சோடனைகள், Castket Spray, Casket அலங்காரம் போன்ற அனைத்துத் தேவைகளையும் தரமாகவும் நியாய விலையிலும் பெற்றிட அழையுங்கள் **(416) 288-9848** சேவை செய்யக் காத்திருக்கும் மாஸ்டர் அல்லது பிள்ளை

மணவறையும் மாலையும் எடுப்பவர்களுக்கு பூச்செண்டு, அல்லது பூக்கடை அல்லது பூக்கடை பூக்கூடை அல்லது உதிரிப்பூ இலவசம்.

**1662 Victoria Park Ave.**(ஸ்ரீவள்ளி ரெக்ஸ்ரைலஸ் இன் கீழ்ப்பாகத்தில்)

தொடர்புகளுக்கு

**பிள்ளை** அல்லது **மாஸ்டர்**

**Tel.: (416) 288-9848**

**Fax: (416) 288-9889**

பலவர்ண அச்சுத்தேவைகளுக்கு
தமிழர் மத்தியில் தனித்துவமான நிறுவனம்!

4 COLOUR PRESS
FULL PRINTING SERVICES

VIVEKA
PRINTERS

80 BARBADOS BLVD. UNIT 3 & 4 SCARBOROUGH ON. M1J 1K9
T: (416) 410 6401 / 269 1994 F: (416) 264 2715